பக்கங்கள்:-எட்டு

Registered as a News paper in Sri Lanka விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD.

# வலம்புரி

## The Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 04 வியாழக்கிழமை (21.08.2003) தொலைபேசி - 2223378 ஒலி 245

# வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரிப்பதில் ஜனாதிபதி அக்கறை

## ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியாகப் பிரிப்பது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீவிர கவனம் செலுத்தி வருவதாக அவரின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாகக் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் தாக்குதல் மற்றும் கொலைச் சம்பவங்களைத் தொடர்ந்து, அப்பகுதி மக்களின் பாதுகாப்பில் சந்தேகம் எழுந்துள்ளதாக ஜனாதிபதியிடம் முஸ்லிம் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனையடுத்தே ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

அரசாங்கம் தற்போது முன்னெடுத்து வரும் சமாதான முயற்சிகளுக்குக் கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு நிலைமைகள் முக்கிய தடையாக இருப்பதாக ஜனாதிபதி கருதுவதாகவும், எனினும் இவ்விடயம் தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் எத்தகைய பயனும் கிடைக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடரவேண்டுமென்பதில் ஜனாதிபதி ஆர்வமாக இருப்பதாகவும், சமாதானப் பேச்சுவார்த்தையின் பின் ஏற்படும் அரசியல் தீர்வில், தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்றும், எந்தக்கட்சி ஆட்சியில் இருந்தாலும், சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்திருப்பதாகவும் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

(வு)

## பரீட்சை பெறுபேற்றை மீளாய்வு செய்யலாம்

(கொழும்பு)

க. பொ. த (உயர்தரப்) பரீட்சை பெறுபேற்றை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை இலங்கை பரீட்சைத் திணைக்களம் கோரியுள்ளது.

விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்தி இம் மாதம் 29ம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், மதிப்பீட்டுக் கிளை, தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இ.1503 கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பெறுபேறு மீளாய்வு, க. பொ. த (உயர்தரப்) பரீட்சை 2003'' என குறிப்பிடல் வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-5)

# முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு தனியான பொலிஸ் சேவை!

## கூட்டமைப்பு எம்.பிக்கள் கண்டனம்
## பிரதமர் ரணிலுடனும் சந்திப்பு

(நமது நிருபர்)

**கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் அசம்பாவிதச் சம்பவங்கள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை நேற்றுச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பிற்கென முஸ்லிம் இளைஞர்களைப் பொலிஸ் சேவையில் சேர்ப்பதற்கான அரசின் நடவடிக்கைக்கு கண்டனமும் ஆட்சேபமும் தெரிவித்துள்ளனர்.**

கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் கொலைகள், தாக்குதல் சம்பவங்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

நேற்று நண்பகல் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற பிரதமருடனான சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த வீ.ஆனந்தசங்கரி, இரா.சம்பந்தன், செல்வம் அடைக்கலநாதன், யோசப் பரராஜசிங்கம், சந்திரநேரு, எம்.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்களைத் தடுப்பதற்கும், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் முஸ்லிம்களுக்கெனத் தனியான பொலிஸ் பிரிவு அமைக்கப்படுவது நீண்டகாலமாக இருந்துவரும் தமிழ், முஸ்லிம் நல்லுறவைப் பாதிக்கும் ஒரு நடவடிக்கையாக உள்ளது.

முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கென அமைக்கப்படும் தனிப் பொலிஸ் பிரிவு ஒருபோதும் நன்மையளிக்கப்போவதில்லையென்றும் சுட்டிக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## 500 முஸ்லிம்களை பொலிஸ் சேவையில் இணைக்க முடிவு

### பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை அதிகரிக்கும் வகையில் தகுதிவாய்ந்த முஸ்லிம் மக்களில் 500 பேரை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் ரீ. ஈ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அப் பகுதி மக்களை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்வ

(08 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்கள் எமது எதிரிகள் அல்லர்

### மட்டு. பொறுப்பாளர் கௌசல்யன்

(மட்டக்களப்பு)

முஸ்லிம் மக்கள் எமக்கு விரோதிகளோ அன்றி எதிரிகளோ அல்லர். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பு மீனவர்களுக்கு பொருண்மிய நிறுவனத்தால் கடனடிப்படையில் வள்ளங்கள் வழங்கப்பட்ட நிகழ்வில் உரையாற்றும் போதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாகம் குறித்து, அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. அதில் ஒரு நிரந்தரமான முடிவு எட்டப்படும் நிலையில் முஸ்லிம் மக்களுக்கும் ஒரு தீர்வு வழங்கப்படும். பாரபட்சமான முறையில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படமாட்டார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-5,14)

## பக்திப் பரவசத்தை ஏற்படுத்திய நல்லூர்க் கந்தனின் கார்த்திகை உற்சவம்

(யாழ்ப்பாணம்),

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற கார்த்திகை உற்சவம் மிகச் சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் நடைபெற்றது. ஆலய உள்வீதியெங்கும் குத்துவிளக்குகள் ஒளிபரப்ப, தீர்த்தக்கேணியில் கர்ப்பூர தீபம் தாங்கிய சட்டிகள் தண்ணீரில் மிதக்கவிடப்பட்ட காட்சி அதி அற்புதமாகக் காணப்பட்டது.

சிவனின் நெற்றிக் கண்ணில் உதித்த ஒளிப்பிளம்புகள் சரவணப் பொய்கையில் மிதப்பது போன்ற

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் யாழ். பல்கலை ஊழியர் சங்கம் சீற்றம்

(யாழ்ப்பாணம்)

வலம்புரிப் பத்திரிகையில் நேற்றைய தினம் ''பல்கலைக் கழக வேலை நிறுத்தம்'' என்ற தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கம் குறித்து யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கம் கண்டனக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

சங்கத்தின் தலைவர் சி.தங்கராஜா, இணைச் செயலாளர் மா.குணசேகரன் ஆகியோர் கையொப்பமிட்டு அனுப்பிய கடிதம் வருமாறு:-

ஆசிரியர்,
வலம்புரி,

ஐயா

நேற்றைய தினம் தங்கள் பத்திரிகையில் நாடு முழு

(08ஆம் பக்கம் பார்க்க)

# பக்தாத்தில் ஐ.நா. தலைமைக் காரியாலயம் தகர்க்கப்பட்டதற்கு உலகெங்கும் கண்டனம்

## காரணமானவர்களைக் கண்டுபிடிப்போம் அதிபர் புஷ்

(வாஷிங்டன்)

**பக்தாத்தில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பு சம்பவம் குறித்து அனைத்து உலக நாடுகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.**

ஈராக்கிற்கான ஐ.நா.வின் சிறப்புத் துாதர் செர்ஜியோ வியெராடிமெலோ உள்ளிட்ட 20பேர் இச்சம்பவத்தில் கொல்லப் பட்டனர். 100ற்கும் அதிகமானோர் காயமுற்றனர்.

ஈராக்கை சீரமைக்கவும் மனிதாபிமான உதவிகள் புரிந்திடவும் பொருளாதார மேம்பாட்டிற்காகவும் ஐ.நா. பெரும்பங்கு வகித்து வருகிறது. இச்சம்பவம் மன்னிக்க முடியாத ஒரு செயலாகும் என ஐ.நா. தலைமைச் செயலர் கோபி அனான் கூறியுள்ளார்.

ஈராக் பிரச்சினையைத் தீர்ப்பதில் குழப்பம் விளைவிக்க முயலும் பயங்கரவாதிகளை சர்வதேச சமுதாயம் ஒரு போதும் அனுமதிக்காது என பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் கூறியுள்ளார்.

பக்தாத்திலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெற்ற வெடிகுண்டுச் சம்பவத்தில் ஐ.நா.வின் மூத்தபிரதிநிதி கொல்லப்பட்டது தொடர்பாக ஐ.நா. தலைமைச் செயலர் கோபி அனான் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நேற்று விளக்கமளிக்க விருந்தார்.

இத்தாக்குதல் குறித்து பல நாடுகளின் தலைவர்கள் தங்க ளது அதிர்ச்சியை வெளியிட்டுள் ளனர்.

ஈராக்கில் நடைபெற்ற முகாந்தரமற்ற மற்றும் படுகொலைச் சம்பவம் மன்னிக்க முடியாத செயல் என்று கோபி அனான் தெரிவித்துள்ளார்.

குண்டுவெடிப்புக்குக் காரணமானவர்கள் தேடிக் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ச் டபிள்யு புஷ் உறுதி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதிகள் இதுபோன்ற அச்சுறுத்தல்களால் ஈராக்கை ஓர் அமைதியான ஜனநாயக நாடாக மாற்றுவது என்ற தமது குறிக்கோளை தடுத்துவிட முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இச்சம்பவத்திற்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஒரு இஸ்லாமியப் பயங்கரவாத அமைப்பு இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாக வாஷிங்டனில் அரசு தகவல்கள் தெரிவிக்கின்றன. (பி-9)

## அல்கெய்டா காரணம்?

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்திலுள்ள ஐ.நா. தலைமையகம் முன்பாக பாரிய தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இந்தக் குண்டுத் தாக்குதலில் ஐ.நா.விசேட பிரதிநிதி செர்ஜியோ வியெராடிமெலோ உட்பட குறைந்தது 17 பேர் கொல்லப்பட்டிருப்பதாக ஈராக்கிலுள்ள அமெரிக்கப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் நூற்றுக்கணக்கானோர் இந்தக் குண்டுவெடிப்பில் சிக்கிக் காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 58 ஆண்டு கால ஐ.நா. அமையத்தின் வரலாற்றில் அதன் அலுவலகம் ஒன்றின்மீது நடத்தப்பட்ட மிகப்பெரிய தாக்குதலாக இந்தத் தாக்குதல் கணிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரையில் எந்தவொரு அமைப்பும் உரிமை கோராத போதிலும் ஈராக்கில் தற்போது ஊடுருவியிருக்கும் அல்கெய்டா அமைப்பினரே இந்தத் தாக்குதலை செய்திருக்கலாம் என்று தான் கருதுவதாக ஈராக்கின் அமெரிக்க ஆதரவு நிர்வாகத்திற்குப் பொறுப்பான போல் பரீமர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் முன்னாள் உப ஜனாதிபதி அமெரிக்க ஆதரவு குர்திஷ் தேசாபிமான முன்னணியினரால் கைது செய்யப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாகவே இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் மற்றொரு தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஐ.நா.விசேட பிரதிநிதி செர்ஜியோ வியெராடிமெலோ ஈராக்கிற்கான புதிய அலுவலராக அண்மையில் ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானினால் நியமிக்கப்பட்டவராவார். (பி-9)

## வழிபாடு செய்துவிட்டுத் திரும்புகையில்

# இஸ்ரேலிய பக்தர்கள் மீது தற்கொலைக்குண்டுத் தாக்குதல்

## 20 பேர் பலி; 100ற்கும் மேற்பட்டோர் காயம்

(ஜெருசலேம்)

ஜெருசலேம் புனித தேவாலயத்தில் வழிபாடு செய்துவிட்டு திரும்பிக்கொண்டிருந்த இஸ்ரேலிய பக்தர்கள் பயணம் செய்த பஸ் வண்டி மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்றில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

கமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிகாத் அமைப்புகளால் உரிமை கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்ற இந்தத் தாக்குதலில் மேலும் நூற்றுக்கணக்கானோர் காயங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்குமிடையே அமெரிக்க ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் வீதி வரைபடம் சமாதான முயற்சிகள் அண்மைக் காலமாக தடைப்பட்டிருக்கும் நிலையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருப்பதானது சமாதான முயற்சிகளை மேலும் பாதிக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

சமாதான முயற்சிகள் தடைப்பட்டு இருந்த நிலையில் இஸ்ரேல் வசம் இருக்கும் மேற்குக் கரை நகரங்கள் நான்கை பலஸ்தீனர்களிடம் கையளிப்பது தொடர்பான பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கலாம் என்று நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் இந்தப் புதிய தாக்குதல் நிலமையை இன்னும் மோசமாக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இஸ்ரேலியர் மீது இடம்பெற்ற மிக மோசமான தாக்குதல் இதுவென இஸ்ரேலிய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பி-9)

## உகண்டாவின் ஜனாதிபதி

# இடி அமீனின் உடலை பார்வையிடவும் மறுப்பு

(கம்பாலா)

உகண்டாவின் ஜனாதிபதி யோவெரி முசேவேனி உகண்டாவின் முன்னாள் ஜனாதிபதி இடி அமீனின் சடலத்தைப் பார்வையிடவும் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கவும் மறுப்புத் தெரிவித்துவிட்டார்.

அத்துடன், இடி அமீனின் உடலை அரச மரியாதையுடன் அடக்கம் செய்வதற்கும் அவர் எதிர்ப்புத் தெரிவித்தார். இடி அமீனை வைத்தியசாலையில் சென்று பார்வையிட்ட ராஜதந்திரிகளையும் அவர் கடுமையாகச் சாடியிருக்கின்றார்.

இடி அமீனுக்கு மரியாதை வழங்குவதன் மூலம் அவர் பிறந்த பிரதேசத்து வாக்காளர் களைக் கவர்ந்து கொள்ள முடியும் என்று ஆலோசனை கூறியவர்க ளையும் உகண்டா ஜனாதிபதி யோவெரிமுசேவேனி வன்மையாகக் கண்டித்திருக்கின்றார்.(பி-9)

## முன்னாள் கைதிகளின் குற்றப்பதிவுகளை அழிக்க

# கோருகிறார் ஐ.ஆர்.ஏ. தலைவர்

(பெல்பாஸ்க்)

அயர்லாந்தில் கலவரங்கள் இடம்பெற்று வந்த நாட்களில் ஐ.ஆர்.ஏ (ஐரிஸ் குடியரசு இராணுவம்) புரிந்துள்ள குற்றச் செயல்கள் பற்றிய அனைத்துப் பதிவுகளையும் அழித்துவிடவேண்டுமென்று அந்த அமைப்பின் தலைவர்களில் ஒருவரான சின்பெயின் கோரிக்கை விடுத்துள்ளார்.

அயர்லாந்துக் கலவரங்களின் போது சுமார் 15 ஆயிரம் ஐ.ஆர்.ஏ உறுப்பினர்கள் குற்றச் செயல்கள் புரிந்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

பெரியவெள்ளி ஒப்பந்தத்தின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ள இந்த முன்னாள் பயங்கரவாதிகளின் கொலைகள் உட்பட குற்றச் செயல்கள் பற்றிய பதிவு கள் யாவற்றையும் அழித்துவிட வேண்டுமென்றும் அதன்மூலம் அவர்கள் மீளவும் பொது வாழ்வில் இணைந்துகொள்ள உதவ வேண்டும் என்றும் குடியரசுவாதிகள் பிரிட்டன் அரசையும் ஐரிஸ் குடியரசையும் கேட்டுள்ளனர்.

இவ்வாறான பல சலுகைகளை சின்பெயனும் அவரது குடியரசு வாதிகளும் கோரி வருகின்றனர். அவை பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அதேவேளை ஐ.ஆர்.ஏ. ஆட்சேர்ப்பிலும் பயிற்சி கொடுப்பதிலும் ஆயுதம் தரிப்பதிலும் ஈடுபட்டு வருவதுடன் ஆயுதக் களைவுக் கோரிக்கையை நிராகரித்து வருகின்றது.

குடியரசு வாதிகளின் கோரிக்கையின் பட்டியலில், முன்னாள் பிரதமர் மார்க்கிரெட் தச்சரைக் கொல்ல முயன்ற பாட்றிக் மக்கி, சிற்றுண்டிக் கடையொன்றில் வைத்து 9 புரட்டஸ்தாந்துவாதிகளைக் கொன்ற சீன்கெல்லி, மவுன்ட்பேட்டன் பிரபுவைக் கொன்றவர்கள் மற்றும் ஐ.ஆர்.ஏ கடைசியாக போர் நிறுத்தம் அறிவிப்பதற்கு முன்னராக 9 பாதுகாப்புப் படையினரைக் கொன்றவர்கள் போன்றோரும் அடங்குவர்.

விடுதலையாகியுள்ள முன்னாள் கைதிகள் தமது குற்றப்பதிவுகள் காரணமாக தொழில் ஏதும் பெற்றுக்கொள்ள முடியாது இருக்கிறார்கள் என்று சின்பெயின் கூறியுள்ளார்.

ஆனால் இந்த நபர்கள் என்ன செய்தார்கள் என்பது பதிவுகளில் இருப்பது அவசியம் என்றும் இம்மாதிரி இனி ஒருபோதும் நடக்காமல் தடுக்க இது உதவும் என்றும் அல்ஸ்ரர் ஜூனியன் வாதியான மைக்கல் மெக்கிம்ப்சே என்பவர் கூறியுள்ளார்.

(பி)

## வாஜ்பாய் அரசுக்கெதிரான

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாராளுமன்றில் படுதோல்வி

(புதுடில்லி)

வாஜ்பாய் அரசுக்கெதிராக மக்களவையில் காங்கிரஸ் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் பின்னிரவில் எதிர்க்கட்சிகள் வற்புறுத்தலில் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. 312 உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராகவும், 186 உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்களித்தனர்.

20 மணி நேரம் நீண்ட விவாதத்திற்குப் பிறகு 126 வாக்குகள் வித்தியாசத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.

வாக்கெடுப்பில் எவரும் கலந்து கொள்ளாமல் இல்லை. சில எம்.பிக்கள் தங்களது கட்சிகள் எடுத்த முடிவின்படி சபைக்கு வராமல் இருந்துவிட்டனர்.

முன்னதாக விவாதத்திற்குப் பதிலளித்த பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் எதிர்க்கட்சித் தலைவி சோனியாகாந்தி வாசித்த 9 அம்சக் குற்றப் பத்திரிகையை நிராகரித்தார். நாடும், நாட்டின் வெளியுறவுக் கொள்கையும் அடகு வைக்கப்பட்டு விட்டது என்று சோனியாகாந்தி பேசியது அபத் தம் என்று அவர் சொன்னார்

பொருளாதாரப் பிரச்சினைகளில் வேண்டுமானால் நேர்மையான முறையில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக்கொள்கை என வரும்போது கருத்து ஒற்றுமை தேவையென பிரதமர் கூறினார்.

அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தால் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை உருவாக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டை மறுத்த வாஜ்பாய் ஈராக்குக்கு துருப்புக்களை அனுப்புமாறு அமெரிக்கா விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

1983லும் 95லும் காங்கிரஸ் அரசு 2 தடவை அணுவாயுத சோதனை செய்ய முடிவு செய்தது. ஆனால் சர்வதேச நெருக்குதலுக்குப் பணிந்து கடைசி நேரத்தில் கைவிட்டது என்று வாஜ்பாய் கூறினார்.

மக்கள் விரும்பும்வரை தமது அரசு ஆட்சியை தொடரும் என கூறிய பிரதமர் கூட்டணி அரசு தான் இந்திய நாட்டை ஆள முடியும் என்பதை காங்கிரஸ் கடைசியில் உணர்ந்து விட்டது என்று கூறினார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் முடிவு எதிர்பார்த்தபடிதான் இருந்தது என்று கூறியுள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் விவாதத்திற்கு பிரதமர் பதிலளித்த விதத்தில் கூறியுள்ளனர். (பி-9)

## சிற்றூர்தி விபத்தில் 14 பாடசாலை மாணவர்கள் பலி

(புதுடில்லி)

பாடசாலைச் சிறார்களை ஏற்றிச்சென்ற சிற்றூர்தியொன்று சாலையோர கிணறொன்றில் கிவிழ்ந்ததில் அதில் பயணித்த 14 சிறுவர்கள் உயிரிழந்தனர்.

ஆந்திர மாநிலத்தில் கரீன் நகர் மாவட்டத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சிற்றூர்தியில் சுமார் 35ற்கும் மேற்பட்ட தனியார் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் பயணித்ததாகவும் தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

சிற்றூர்தியின் ஓட்டுநர் கட்டுப்பாட்டை இழந்ததனால் சிற்றூர்தி கவிழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த ஏனைய சிறார்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்கள். (பி-9)

# புத்தளம்-கற்பிட்டி இடையே பயணிகள் படகு சேவை

(புத்தளம்)

புத்தளத்திற்கும்- கற்பிட்டிக்கு மிடையில் பயணிகள் படகு சேவை ஒன்று ஆரம்பிப்பதற்கான உடன் படிக்கை அடுத்தவாரம் கைச்சாத் திடப்படவுள்ளது.

புத்தளம் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புத்தளம் துரித நகர அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் கூட் டத்திலேயே இந்தத் தகவல் தெரி விக்கப்பட்டுள்ளது.

பயணிகள் மற்றும் பொருட் களை ஏற்றி இறக்குவதற்கான இறங்கு துறை ஒன்று புத்தளத்தில் அமைப்ப தற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளதாக வடமேல் மாகாண சபை ஐ.தே.கட்சி உறுப்பினர் எம்.ஐ. பிஸ்ருல்ஹாபி தெரிவித்தார்.

புத்தளத்திற்கும்-கற்பிட்டிக் குமிடையில் தரை வழிப்பாதையாக 27 கிலோ மீற்றர் உள்ளதால் இதற் கென 2 மணித்தியாலங்கள் செல விடப்பட வேண்டியுள்ளது, கடல் வழிப் போக்குவரத்தின் மூலம் 6கிலோ மீற்றர் பயணம் செய்யவேண்டி வரு மென்றும் அங்கு சுட்டிக்காட்டப் பட்டது.

இதனால், உள்ளூர் மற்றும் உல் லாசப்பயணிகளுக்கான பொழுது போக்கு தளமாக இப்பிரதேசம் திகழும் எனவும் அவர் தெரிவித் தார். (உ-15)

# மாகாணசபை தேர்தலுக்கு முன் ஜே.வி.பியுடன் கூட்டு ஏற்படுமாம்




# எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர நாம் தயங்கமாட்டோம்

## ரிசாத் பதியுதீன் காட்டமான அறிக்கை

(புத்தளம்)

வடக்கு- கிழக்கு மாகாண முஸ் லிம்களின் பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்தத் தவறும் பட்சத்தில் தொடர்ந்தும் அரசில் அங்கம் வகிப் பதில் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு இல்லை.

இவ்வாறு வன்னி மாவட்ட ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பி னர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள் ளார்.

சம்மாந்துறை ,மூதூர் பிரதேசங் களில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நாட்டில் சமாதானம் என்ற ஒன்று ஏற்பட்டால் ,அதில் மூவின மக் களும் சமபங்கை அடைய வேண்டும்.

வன்முறைக் கலாசரத்தின் மூலம், முஸ்லிம்களை அடக்க எந்த சக்தி களும் முன்வருவதை அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது .இதற்கெதி ராக உரிய நடவடிக்கை எடுப்பதில் அரசு நழுவல் போக்கைக் கடைப் பிடிக்குமெனில் எமது பதவிகளைத் துறந்து எதிர்க்கட்சி ஆசனத்தில் அமரவும் நாம் தயங்க மாட்டோம் எனவும் அவ்வறிக்கையில் ரிசாத் பதியுதீன் குறிப்பிட் டுள்ளார். (இ-15)

# பாராளுமன்ற வெளிச் செயற்பாடுகளை தடுக்கும் அதிகாரம் எனக்கு இல்லை

## சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றக் கட்டடத்திற்கு வெளியே,பாராளுமன்ற உறுப்பினர் கள்ால் மேற்கொள்ளப்படும் நட வடிக்கைகளைத் தடுக்க தனக்கு அதி காரம் கிடையாது என சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன் றம் கூடியபோது, பொதுஜன ஐக் கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே எழுப்பிய கேள்விச்சுற்றுக் குப் பதிலளிக்கையில் அவர் இத னைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் சபாநாயகர் உரை யாற்றுகையில்,

பாராளுமன்றத்தின் சிறப்புரிமை கள்.பேணப்படும் வகையில் நடவடிக் கைகளை மேற்கொள்ள முடியுமே தவிர நிலையியற் கட்டளைச் சட் டங்களில் அதற்கு இடமில்லை.

நீதி மன்ற உத்தரவுகளுக்கு அமைய மேற்கொள்ளப்படும் கைது கள்,பொலிஸ் விசாரணைகள், நீதி மன்ற நடவடிக்கைகள் போன்ற விட யங்களில் தலையிடும் அதிகாரமும் எனக்குக்கிடையாது என்றார். (தி)

# அரசுக்கான ஆதரவை விலக்குவது என்ற நிலைப்பாட்டை வாபஸ் பெற்றார் ஹக்கீம்

(கொழும்பு)

சம்மாந்துறைப் பகுதியில் பாது காப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதை மீண்டும் யுத்த நிலையினை ஏற்படுத் துவதற்கான ஒரு தயார்ப்படுத்தல்



என எவரும் கருதக்கூடாது.

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் துறைமுக அபிவிருத்தி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளு மன்றக் கட்டடத் தொகுதியில் நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரி விக கையிலேயே அவர் இதனைத் தெரி வித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

சம்மாந்துறையில் கடந்த 17ஆம் திகதி இரு விவசாயிகள் கொலை செய்யப்பட்டமையினை அடுத்து, அப பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை மீண்டும் போரிற்கு தயா ராகுவதாக எவரும் கருதக்கூடாது.

இதனால்,தற்போது மேற் கொள் ளப்பட்டு வரும் சமாதான முயற்சி களில் எந்தவிதத்திலும் பாதிப்பும் ஏற்படாது. சமாதான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படவேண் டும்.

அத்துடன், எந்தவொரு தரப்பின ரும் மீண்டும் ஓர் யுத்தத்தை ஆரம்பிக் கக் கூடாது. சமாதான முன்னெடுப்புக களில் உள்ள குறைபாடுகளைத் திருத்தி, சமாதான முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொள்ள வேண் டும்.

அண்மைக் காலங்களாக நடை பெற்று வரும் கொலை மற்றும் கடத் தல், சம்பவங்கள் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசத்த யாராக இருக்கிறோம் என்பதையும் இங்கு கூறிவைக்க விரும்புகிறேன்.

முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப் பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் அரசாங்கத்தை விட்டு விலகுவது ஒரு தீர்வாக அமையமாட் டாது.

அதேசமயம்,முஸ்லிம் இளைஞர் கள் ஆயுதம் ஏந்தத் தயாராகிக் கொண்டிருக்கின்றதாகவும்,முஸ்லிம் மக்களைப் பாதுகாப்பதற்கு தனி யான படை ஒன்றை ஆரம்பிக்கவுள்ள தாகவும் செய்திகள் வெளியாகியி ருக்கின்றன.

இதனை நான் முழுமையாக நிராகரிக்கின்றேன். இதனை ஒரு சில அரசியல் இலாபம் தேடும் தீய சக்திகளால் பரப்பப்படும் வதந்தியா கவே நான் கருதுகின்றேன்.

இவ்வாறான சம்பவங்கள் இனி யும் நடைபெறாதிருக்க, முஸ்லிம்- தமிழ் சமூகங்கள் இரண்டும் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

ஏற்கனவே, கிழக்கில் இடம் பெற்று வரும் படுகொலைகள்,ஆட் கடத்தல்சம்பவங்கள் குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன்,மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளும் பொறுப்பு தமிழீழ விடு தலைப்புலிகளுக்கும் உண்டு'என் றும் அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரி வித்தார். (உ-10)



வலிகாமம்-பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும் அங்கத்துவ சங்கங்களும் இணைந்து அண்மையில் நடாத்திய கூட்டுறவு தின விழாவில்,சிறந்த அங் கத்துவ பணியாளருக்கான விருதை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஸ்ணசாமி அங்கத்தவர் ஒருவருக்கு வழங்குகிறார்.

# தென்மராட்சி மக்களின் மணல் பெறும் விண்ணப்பங்கள் உதாசீனம்?

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்டுள்ள தம் வீடுகளைப் புனரமைப்பதற்குரிய மணல் மண்ணைப் பெறுவதில் தென மராட்சிப் பகுதி மக்கள் பெரும் இடை யூறுகளை எதிர் நோக்கி வருகின் றனர்.

கடந்த கால யுத்த அனர்த்தங்களி னால் தென்மராட்சியில் ஏராளமான குடியிருப்புகள் பெரும் சேதமடைந் தும், அழிவடைந்தும் உள்ளன.

மீள இங்கு குடியேறியுள்ள மக் கள், தமது வீடுகளைப் புனரமைக்க ஆர்வம் காட்டி வருகின்றபோதிலும், அதற்கு அடிப்படையாக அமை கின்ற மணலைப் பெற்றுக்கொள் வதில் இருக்கின்ற இடர்பாடுகள் இந்தப்பணியைத் தாமதப்படுத்து கின்றது அல்லது தடைப்படுத்துகின் றது.

வீடுகளை அமைப்பதற்கு வேண் டிய மணலைப் பெறுவதற்கு இப்பகுதி மக்கள் சூழல் பாதுகாப்புச் சபையின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே விண்ணப்பிக்கின்ற போதிலும் அவ் விண்ணப்பங்களை பிரதேச செய லக அதிகாரிகள் கிடப்பில் போடு வதாகவும் குற்றச்சாட்டு சுமத்தப் பட்டுள்ளது.

இதேவேளை, இது விடயத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகி யோர் தலையிட்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப் பட்டவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. (உ-4)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

''வர்த்தகத் தொழிற்றுறை மன் றத்தின் வளர்ச்சிக்கு பத்திரிகை களாலான உதவி'' என்ற தலைப்பில் கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3மணிக்கு யாழ். வர்த்தகத் தொழிற் றுறை மன்றத்தில் இடம்பெறவுள் ளது. (உ)



யாழ். பல்கலைக்கழக மாணவன் தமிழ்வேந்தனின் சொல்வன் மையைப் பாராட்டி அண்மையில் வீரமாகாளி அம்மன் தேவஸ் தானத்தில் நல்லை ஆதீன முதல்வரால் செஞ்சொல் தமிழ் வித்தகர் எனும் பட்டம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ம காரை எம்.பி. அருளானந்தம் பாராட்டுரை நிகழ்த்து

# பல்கலைக்கழக விடுதிகளில் வெளியார் தங்குவதற்குத் தடை

## மீண்டும் பழைய ஒழுக்காற்று முறை அமுலுக்கு வரும்

(கோட்டை)

பல்கலைக் கழகங்களில் மீண்டும் "மார்ஷல்" ஒழுக்காற்று முறையை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாக ஊடகச் செய்தியொன்று கூறுகின்றது. மானவர் மத்தியில் வன்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கென இந்த முறையை அமுல்படுத்த ஆலோசித்து வருவதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளனவென்று அச்செய்தி கூறுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக்குழு இன்று வியாழக்கிழமை கூடவிருக்கின்றது.

பல்கலைக்கழக விடுதிகளில் வெளியார் தங்கியிருப்பது தெரிவுக் குழுவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இது பாதுகாப்புக்கு பெரும அச்சுறுத்தலாக இருந்து வருகின்றது. சமீபகாலத்தில் பல்கலைக்கழகங்களில் ஏற்பட்டுள்ள பல கலவரங்களின் பின்னணியில் வெளியார்களே இருந்துள்ளார்கள்.

எனவே, விடுதிகளில் அதிகாரம் பெறாத ஆட்கள் தங்கியிருப்பதற்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வாயில்களில் மாணவர்கள் அடையாள அட்டைகளை காண்பிக்கவேண்டியது கட்டாயமாக்கப்படும். வெளியார்மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் பாதுகாப்புப் பிரிவினருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படும். இவ்வாறு அச்செய்தி கூறுகிறது. (பி)

## வட-கிழக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களை

# ஏனைய இடங்களில் பணிக்கமர்த்துவது கவலைக்குரியது

## கல்வி அமைச்சருக்கு அடைக்கலநாதன் எம்.பி.கடிதம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவும் இக்கால கட்டத்தில், வடக்கு-கிழக்கு மாவட்டமல்லாத வேறு மாவட்டத்திற்கு, சுயவிருப்பத்திற்கு மாறாக பயிற்றப்பட்ட ஆசிரியர்களைப் பணிக்கு அமர்த்தியிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

கடந்த ஆண்டிறுதியில், கல்வியியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறிய வடக்கு-கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு வேறு மாவட்டங்களில் நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறித்து சம்பந்தப்பட்ட 47 பேர் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

மேற்படி கடிதத்தினை அடிப்படையாகக் கொண்டு, மன்னார் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கல்வி அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுளளது.

அக்கடிதத்தின் விபரம் வருமாறு,

வடக்கு-கிழக்குப் பாடசாலைகள் அனைத்தும் போரினால் பாதிக்கப்பட்டு பாடசாலைகளில ஆசிரியர்கள் இல்லாமல் வடக்கு-கிழக்கு மாணவர்களினது கல்வி பின்தள்ளப்பட்டு தொண்டர் ஆசிரியர்களினால் ஓர் அளவு கல்வி நிலை காப்பாற்றப்பட்டிருக்கும் இவ்வேளையில் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த ஆசிரியர்கள் வேறு மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டது புதிராய் உள்ளது.

இவ் ஆசிரியர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு தாங்கள் கடமைபுரிவதைச் சுட்டிக்காட்டி தங்களை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் எந்த இடத்திற்கு மாற்றினாலும் அங்கு சேவை செய்ய ஆயத்தமாய் இருப்பதாக ஆசிரியர்கள் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடிதத்தில் மாற்றம் கேட்டுக் கூறப்பட்ட காரணங்களாவன,

* வடக்கு-கிழக்கில் 6000 ஆசிரிய வெற்றிடங்கள் நிலவுகின்றது.
* போரினால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தில் தற்சமயம் மீள் புனரமைப்பு,மீள்குடியேற்றம் என்பன நடைபெறுவதால் எமது பங்களிப்பு அங்கு அவசியம்.
* ஏனைய மாகாண ஆசிரியர்கள் அனைவரும் தமது சொந்த மாகாணத்திலேயே நியமனம் பெற்றுள்ளனர்.
* இங்கு நியமிக்கப்பட்டுள்ள அனேகமான ஆசிரியர்கள் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்வதால் யாழ்.மாவட்டத்தில் உள்ள தமது குடும்ப நலன்களைக் கவனிக்க முடியாது.
* மேலும்,நாங்கள் இங்கு போக்குவரத்து வசதியின்மை, தங்குமிடப் பிரச்சினை போன்ற பல்வேறுபட்ட இன்னல்களிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம்.

விருப்பமற்ற நிலையில் இவர்கள் அங்கு கடமையாற்றுவதால் எந்தெந்த நோக்கத்திற்காக அனுப்பப்பட்டார்களோ அந்த நோக்கம் நிறைவேற வாய்ப்பில்லாமல் போகிறது.

எனது வன்னித்தொகுதிப் பாடசாலைகளின் விஞ்ஞானம், கணிதம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்காகிய ஆசிரியர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வன்னிமாவட்டம் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு அண்மையில் இருப்பதால் இவர்களை இங்கு நியமிப்பதன் மூலம் எமது பாடசாலைகளின் ஆசிரிய பற்றாக்குறை ஓரளவு நிவர்த்தியாவதுடன், இவர்களது கோரிக்கையும் நிறைவேறும் எனக் கருதுகிறேன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## நல்லையில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இடம்பெற்று வரும் தெய்வீக இசையரங்கில் 19ஆம் திருவிழாவான இன்று சுகன்யா சிவானந்தத்தின் பாட்டுக்கச்சேரி இடம் பெறவுள்ளது.

* * *

நல்லைக் கந்தன் உற்சவத்தையொட்டி யாழ்.மாவட்ட வடபிரதேச இந்துப்பேரவை ஏற்பாட்டில் ஆலயத் தேரடியில் அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெற்றுவரும் தெய்வீக இசைத் தொடரில் இன்று மாலை 6.00 மணிக்கு "அளவிலாத பெருமையர்" எனும் பொருளில் சிவத்திரு எம்.எஸ்.சிறிதயாளன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

* * *

நல்லூர்க் கந்தன் வருடாந்த உற்சவத்தையொட்டி நல்லூர் மேற்குவீதி ஸ்ரீ முத்துவிநாயகர் மண்டப அரங்கில் பிரம்மஸ்ரீ சிவ. வை.நித்தியானந்தசர்மா நிகழ்த்தி வரும் "திருவிளையாடற் புராணம்" தொடரில் இன்று "திருவாதவூரர்" என்ற விடயம்பற்றி இசைப்பேருரை இடம்பெறவுள்ளது. (18)

## நல்லை உற்சவ நிகழ்வுகள் இணையத்தளத்தில்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய உற்சவ நிகழ்வுகள் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் கேட்கும் வகையில் இணையத தளத்தின் ஊடாக ஒலிபரப்பப்பட்டு வருகின்றது.

உலகத் தமிழர் வானொலி நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் ஊடக ஒலிபரப்பில் யாழ்.குடா நாட்டு பாரமபரிய கலைஞர்கள், அறிவுசார் விற்பன்னர்களின் கலந்துரையாடல்கள், நேர்காணல் என்பவற்றை மாலை 6.30 மணிமுதல் 7.00மணி வரை w.w.w. world tamilar.com என்ற இணைய முகவரியூடாகக் கேட்கலாம். (உ-10)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மட்டுவில் தெற்கு வளர்மதி ச.ச.நிலையத்தில் எதிர் வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30மணிக்கு இலவச மருத்துவமுகாம் இடம்பெறவுள ளது.

இதில் நீரிழிவு மற்றும் வாய்ப் புற்றுநோய், இரத்தப்பரிசோதனை என்பனவும் பொதுச்சுகாதாரம் தொடர்பான அறிவுறுத்தல்களும் இவ் இலவச மருத்துவ முகாமில் வழங்கப்படவுள்ளதாக சாவகச்சேரி லயன்ஸ் கழகச் செயலாளர் க.சற்குணதேவன் கேட்டுள்ளார். (உ-16)

## தமிழகத்தில் இருந்து

# நாடு திரும்பிய அகதிகளை வீடுகளுக்கு அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய அகதி முகாம்களில் தங்கியிருந்துவிட்டு கடந்த ஞாயிறன்று மீளக்குடியமரும பொருட்டு படகு மூலம் நெடுந்தீவில் வந்திறங்கிய 20பேரும் நேற்றுமுன்தினம் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இவர்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இருவரும் மன்னார் மாவட்டத்தைசசேர்ந்த 18 பேரும் அடங்குகின்றனர்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 18 பேரும் யாழ்.செயலக வாகனத்தின் மூலம் முகமாலையூடாக அனுப்பிவைக்கப்பட்டனர்.

இவ்வாறு ஊர்திரும்பும் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும தலா ஆயிரம ரூபா கொடுப்பனவை யாழ்.செயலகம் வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-16)

# இரகசியப் பொலிஸ் குழு சம்மாந்துறை சென்றது

(மட்டக்களப்பு)

சம்மாந்துறையில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட இரண்டு முஸ்லிம்களின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக 6பேர் கொண்ட இரகசியப் பொலிஸ் குழுவினர் நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து சம்மாந்துறைக்குச் சென்றுள்ளனர்.


இக் கொலைச் சம்பவம் தொடர்பாக கடந்த திங்களன்று இரவு பிரதமர் ரணில விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள் திலக்மாரப்பன, ஜோன் அமரதுங்க, மிலிந்தமொறகொட ஆகியோருடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பேச்சு நடத்தியிருந்தார்.

இதனையடுத்தே, உட்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்கவின் உத்திரவிற்கு அமைய பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜாவினால் இவ் இரகசியப் பொலிஸ் குழுவினர் சம்மாந்துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை,சம்மாந்துறை சென்ற இரகசிய பொலிஸகுழுவினர் கொலைச் சம்பவம் தொடர்பாக பல கோணங்களிலும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-3)

# நல்லூரான் திருவடிக்கு

## (இன்று பத்தொன்பதாம் திருவிழா)



### எல்லா நலமும் இசைவித்திடு

தண்ணார் தமிழின் தலைவா! முருகா!
பண்ணேர் மொழிவள் ளியவள் கணவா!
கண்ணீர் கடலாய் வழியக் கவலை
கொண்டேன் அவலம் களைநல் லையனே!

நல்லைப் பதிவாழ் நமதின் னுயிரே!
கல்லைக் கனிவித் திடல்போ லெனது
பொல்லா மனசைப் புரிநின் னருளால்
எல்லா நலமும் இசைவித் திடுவாய்

அகலேன் அகலேன் அருள்வாய் குகனே!
பகைவோர் எனவே வருவார் எவரும்
அகலப் பணியன் னவலம் களைவாய்
புகல்நல் லையிலே சரண்நல் குவையே

சொக்கன்

### காத்தருள்வாய் கந்தா!

வெஞ்சமர் தன்னில் சூரனை வதைத்த - வீரா
அஞ்சுதல் கொண்ட அமரரைக் காத்த - தீரா
மஞ்ஞையில் வேலொடு வலம் வரும்- பாலா
துஞ்சமென் றடைந்தோம் காத்திடு - நாதா!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்

### தமிழாய்ந்த குருவே

நல்லை நகரிருந்து நல்லருள்புரியு நாதற்கு
நல்ல கவி பாடி நான் உய்தற்கு எந் நாளும்
வல்லபை கணவ வல்வினை தீர்ப்பவனே உயர்
நல்ல இன் பதங்கள் ஈந்திடுவாய் இரங்கி

ஏதமேதுமிலா மாமேருதன்னில் பாரதம் வரைந்த அண்னல்
கோதிலா குணமுடையாள் துடிஇடைப் பிடிநடையாள்
மேதகு மயிற்சாயல் கிளி மொழிக் கிஞ்சுக வாய் வள்ளிதனை
பேதமிலா தடைய பாங்கனாய் உதவினான் மகிழ்ந்து

முனிவனுக்கு லிகிதனாய் உலகுய்ய உதவிய அண்ணலுக்கு
கனிவான் இன்தமிழ் தன்நிலை குன்றா திருக்குமிடம்
தனியாகவிருந்து தவித்துளலும் தமிழீழ மே என்பதை
இனியேனும் எடுத்துரைக்கத் தவறாதே தமிழாய்ந்த குருவே

கட்டுவனூர் பொ.கனகரத்தினம்

### நாதன்தாள் உய்யவே நாடுவர்

மலைமகள் மருவிய மழுவுடையர்
அலைமலி சரவணத் தருள்புரிவேள்
சிலைநுத லார்தாழும் அமர்விடந்நற்
கலையுண ரவர் தொழு கலைநலூரே

நல்ல நகரெங்கும் நயந்து நாள்தோறும்
அல்லல் வாராமே அன்பர் அருள்கூர
நல்ல நாமங்கள் நவிற்றி நாவினால்
நல்லூர் நாதன்தாள் உய்யவே நாடுவர்

சிவ: சண்முகவடிவேல்

# மாதகல் மற்றும் குடாக்கடல் பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறல்

(யாழ்ப்பாணம்)

மாதகல் மற்றும் குடாக்கடற் பரப்பில் இந்திய மீனவர்களின் நடமாட்டம் கடந்த சில தினங்களாக அதிகரித்து வருவதாக சம்பந்தப்பட்ட பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துமீறும் இந்திய மீனவரின் இழுவைப்படகுகள் கரையை அண்மித்து வந்து அப்பகுதி மீனவர்களால் விரிக்கப்பட்டுள்ள வலைகளையும் அதிலுள்ள மீன்களையும் அபகரித்துச் சென்றுவிடுகின்றன.

இதேவேளை, இவ்வாறு நுழையும் மீனவர்களைத் துரத்திப்பிடித்து பொலிஸில் ஒப்படைப்பதற்கு தமக்குப் போதிய வசதிகள் இல்லாமல் இருப்பதுடன் அது விடயத்தில் கடற்படையின் நெருக்குவாரங்களும் இருப்பதாகப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இவ் அத்துமீறலைக் கருத்திற் கொள்ளாது கடற்படை நடக்குமானால் சுழிபுரம், வடமராட்சி, நெடுந்தீவு மீனவர் கள் போல தாமும் நடந்துகொள்ள வேண்டிய நிலை ஏற்படும் எனவும் இவர்கள் எச்சரித்துள்ளனர்.

(உ-4)

## ஈ.பி.டி.பி அலுவலகத்தை இலக்குவைத்து கைக்குண்டு வீச்சு

(மன்னார்)

மன்னார் ஈ.பி.டி.பி. அலுவலகத்தை இலக்குவைத்து நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டுள்ளது.

இக்குண்டு அலுவலகத்தை அண்டிய வளவு ஒன்றினுள் வீழ்ந்து வெடித்ததால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இக்கைக்குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மன்னார்ப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக் காலங்களாக தமிழ்க்கட்சி அலுவலகங்கள் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்படுவதுடன், இனந்தெரியாத நபர்களினால் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு வருவதையும் அடுத்து, இவ் அலுவலகங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (தி)

# கிழக்கு மாகாண பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்படும்

## பிரதமர் ரணில் உறுதி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

கடந்த திங்களன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பிலேயே பிரதமர் இவ்வுறுதியை அளித்துள்ளார்.

கிழக்கு மாகாண மேலதிக பாதுகாப்புத் திட்டம் தொடர்பாக அரசு உரிய கவனம் செலுத்தும் எனவும் தெரிவித்தார்.

மூதூர், சம்மாந்துறை பிரதேசங்களில் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது. (தி)

# இலங்கை-தாய்லாந்து இடையில் கூட்டு வர்த்தக நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை மற்றும் தாய்லாந்து நாட்டு வர்த்தகர்கள் கூட்டு வர்த்தக நடவடிக்கை பற்றிய கலந்துரையாடலில் தற்போது ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

டென்ஸ்ரெக் கம்பனிகளின் கூட்டமைப்பின் தலைவர் சந்திரா எம்புள்தெனிய இதுபற்றித் தகவல் வெளியிடுகையில்,

இக்கலந்துரையாடல் வர்த்தகர்களுக்குப் பெரும் நன்மைகளைத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான வாய்ப்பை அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த தாய்லாந்துப் பிரத மரே ஏற்படுத்தித் தந்துள்ளார்.

மேலும், இக்கலந்துரையாடல்களில் இலங்கை, தாய்லாந்து ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்துறைகள் மீதும் அதிக கவனம் செலுத்தப்படும்.

இரு நாடுகளுக்கும் நன்மை தரும் உத்திகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படும் அதேசமயம் இவ்விரு நாடுகளுக்குமிடையிலான டென்ஸ்செக் அமைப்பின் கூட்டம் ஒன்று 2004ஆம் ஆண்டு பெப்ர வரி மாதம் தாய்லாந்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன், இலங்கைப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான அத்தியாவசியப் பின்னணி பற்றியும் தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது எனக் குறிப்பிட்டார். (உ-10)

## பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக 2002/2003 ஆம் கல்வியாண்டுக்கான வெளிவாரிக் கலைப்பிரிவுப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழகப் பிரதிப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை தொடர்பான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி)

## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் 7வது ஆண்டு விழாவும் சிறுவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வும் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நாவலர் பாடசாலையில் முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைத் திணைக்களத்தின் அத்தியட்சகர் வி.சிவநேசன் கலந்துகொள்ளவுள்ளார்.

(உ-4)

# மலசலகூடங்கள் அமைக்க இந்து கலாசார அமைச்சு உதவி

(சில்லாலை)

பிரான்பற்று பண்டத்தரிப்புப் பகுதிகளில் மலசலகூடங்களை அமைப்பதற்கான பொருட்களை இந்து கலாசார அமைச்சு வழங்கியுள்ளது.

இப்பகுதிகளில் வறிய நிலையிலுள்ள 80 குடும்பங்களுக்கு மலசலகூடங்கள் அமைப்பதற் கான பொருட்கள் வழங்கப் பட்டுள்ளன.

பிரான்பற்று நாவல் சனசமூக நிலையமூடாக மேற்படி மலசல கூட அமைப்புப் பொருட்கள் வழங்கப்பட்டுக கட்டுமானப் பணிகள துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.. (உ-58)

# மீளளிப்புச் செய்யப்பட்ட பிரதேசத்தில் மதிவெடி அகற்றும் பணி விரைவில்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி தெற்கில் அண்மையில் படையினரால் மீளளிப் புச் செய்யப்பட்ட ஆயிரம் ஏக்கர் விளைநிலத்தில் மிதிவெடிகளை அகற்றுவதற்கான பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

படையினரின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கியிருந்த இப்பிரதேசத்தில் ஆயிரக்கணக் கான மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

இந்நிலையில் விவசாய நடவடிக்கைகளை உடன் ஆரம்பிக்கும் பட்சத்தில் பெரும் உயிரிழப்புக்கள் மற்றும் அவயவ இழப்புக்கள் ஏற்படலாம் என்று அஞ்சப்படுகின்ற நிலையில் இவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் பட்டினிக்கெதிரான நிறுவனம் ஹலோட்ரஸ்ற் கண்ணிவெடி அகற்றும் அமைப்பு ஆகியன ஈடுபடவுள்ளன.

(உ-4)

# பொது மக்களிடமிருந்து பொலித்தீன் கொள்வனவு

(மருதங் கேணி)

பொலித்தீன் மற்றும் பிளாஸ் ரிக் பொருட்களினால் சூழல் மாசுபடுவதைத் தடுக்கும் வகையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதன் ஒரு செயற்பாடாகப் பொதுமக்களிடம் இருந்து பொலித்தீன் ஒரு கிலோ 50 ரூபாவாகக் கொள்வனவு செய்யப்படுகிறது.

இதுவரை 232 கிலோ பொலித்தீன் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

(உ-35)

# பிரி. தடுப்பு முகாமிலிருந்து இலங்கையர் தப்பியோட்டம்

(கொழும்பு)

பிரிட்டன் தடுப்பு முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6 இலங்கையர்கள் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர்.

பிரிட்டன் கன்ஷா பகுதியிலுள்ள தடுப்பு முகாம் ஒன்றில் இருந்து இவ் 6 பேரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை தப்பிச்சென்றுள்ளனர்.

இவர்கள் 20 அடி உயரமான சுவரைத் தாண்டித் தப்பிச்சென்றுள்ளார்கள்.

இவர்களது அரசியல் தஞ்சக் கோரிக்கையைப் பலமுறை பிரித்தானிய அரசு நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி)

# துணுக்காய் கல்வி வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை

(மருதங்கேணி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 53 பாடசாலைகளில் ஒரு பாடசாலை மூடப்பட்டுள்ள துடன் மிகுதி 52 பாடசாலைகளி லும் ஆசிரியர் பற்றாக்குறை இருந்து வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

யர்கள் மட்டுமே தற்போது கடமையாற்றுகின்றனர். இதில் 3 பாடசாலைகளில் மாத்திரமே ஆங்கில ஆசிரியர்கள் கடமையாற்றுவதாகவும் மிகுதி 49 பாடசாலைகளிலும் ஆங்கில ஆசிரியர்கள் இல்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# குடிவெறியில் சட்டத்தரணி மாணவர் கையில் கடித்தாராம்

(கண்டி)

மருத்துவமாணவர் ஒருவரின் கையைக் கடித்தாராம் சட்டத்தரணி

திருமதி கிருஷாந்தி தொடங்கொட முன்னிலையில் பொலிஸார் ஆஜர் செய்தனர்.

## புகையல்

கர்களுக்குப் பெரும் நன்மைகளைத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான வாய்ப்பை அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த தாய்லாந்துப் பிரத மரே ஏற்படுத்தித் தந்துள்ளார்.

மேலும், இக்கலந்துரையாடல் பெறவுள்ளது.

அத்துடன், இலங்கைப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான அத்தியாவசியப் பின்னணி பற்றியும் தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது எனக் குறிப்பிட்டார். (உ-10)

# குடிவெறியில் சட்டத்தரணி
# மாணவர் கையில் கடித்தாராம்

(கண்டி)

மருத்துவமாணவர் ஒருவரின் கையைக் கடித்தாராம் சட்டத்தரணி ஒருவர்.

கண்டிப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற மருத்துவக் கண்காட்சி ஒன்றின் போது இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கண்காட்சிக்குள் பிரவேசித்த காலிப் பகுதியைச் சேர்ந்த இந்த சட்டத்தரணி அங்கிருந்த மாணவி ஒருவரைத் தகாத வார்த்தைகளால் பேசியதுடன் மாணவர் ஒருவரின் கையிலும் கடித்துக் காயப்படுத்தினாராம். அங்கிருந்த காட்சிப் பொருட்களைத் துவம்சப்படுத்தியதுடன் அமைதி யை நிலைநாட்ட வந்த பொலிஸாருக்கும் அடித்துள்ளார்.

சட்டத்தரணியைக் கைது செய்து கண்டி மேலதிக நீதிவான் திருமதி கிருஷாந்தி தொடங்கொட முன்னிலையில் பொலிஸார் ஆஜர் செய்தனர்.

சட்டத்தரணி குடிவெறியில் இருந்தார் என்றும் கண்காட்சியின் பல்வைத்தியப் பகுதியில் பிரவேசித்த அவர் அங்குள்ள மாணவியைத் தகாத வார்த்தைகளால் பேசி பல மாணவர்களுக்கு அடித்து ஒரு மாணவரின் கையிலும் கடித்துவிட்டார் என்று பொலிஸார் கூறினர். சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

அமைதியை நிலைநாட்ட பொலிஸார் வந்தபொழுது அவர்கள் மீதும் தாக்குதல் நடத்தி ஒருவருக்குக் காயமும் ஏற்படுத்தியுள்ளார். காயமுற்ற கான்ஸ்ட பிள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(பி)

# சுயாதீன ஆ.கு. பெயர்ப்பட்டியல்
# ஜனாதிபதியின் அங்கீகாரத்திற்கு

(கொழும்பு)

அரசியல் யாப்புப் பேரவை யின் சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவை அமைப்பது தொடர்பான நடவடிக்கைகள் இவ்வாரம் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

அரசியல் யாப்புப் பேரவை உறுப்பினர்கள் தெரிவித்த யோசனைகளை ஆராய்ந்த பின்னர், இந்த ஆணைக்குழு அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவில் அங்கம் வகிப்போரின் பெயர் விபரங்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அரசியல் யாப்பின் 17வது திருத்தத்திற்கு அமையவே சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்படுவதும் அவர்களது நியமனத்திற்கு இறுதி அங்கீகாரம் அளிக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதியிடம் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவின் கண்காணிப்பிலேயே நடத்தவேண்டும் என அரசாங்கமும் எதிர்க்கட்சியும் தீர்மானித்துள்ளன.

(தி)

(யாழ்ப்பாணம்)

சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் 7வது ஆண்டு விழாவும் சிறுவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வும் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நாவலர் பாடசாலையில் முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைத் திணைக்களத்தின் அத்தியட்சகர் வி.சிவநேசன் கலந்துகொள்ளவுள்ளார்.

(உ-4)

# புதையல் தோண்டியோர் விளக்கமறியலில்

(புத்தளம்)

புத்தளம் வண்ணாத்துவில்லு இறால்மடுப் பகுதியில் கடந்த மாதம் புதையல் தோண்டும்போது கைதான 6 பேர் நேற்று முன் தினம் புத்தளம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது மீண்டும் எதிர்வரும் 26ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 27ஆம் திகதி வண்ணாத்துவில்லு இறால்மடுப் பகுதியில் புதையல் தேரண்டும் போது மூவினத்தையும் சேர்ந்த 6பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் தோண்டி எடுத்த புதையலும் கைப்பற்றப்பட்டது.

பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட புதைபொருட்களில் பண்டைக் கால அரசர்களுடைய தடையப் பொருட்கள் பலவும் காணப்பட்டமையால் அவை ஆராய்ச்சிக்காக தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

நேற்று மேற்படி 6 பேரும் புத்தளம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்ட பொருட்களின் ஆராய்ச்சி முடிவு அறிக்கை கிடைக்கப்பெறாத காரணத்தால் மேற்படி 6 பேரையும் எதிர் வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார். (உ-15)

இவர்களது அரசியல் தஞ்சக

பிரிட்டன் கன்ஷா பகுதியிலுள்ள தடுப்பு முகாம் ஒன்றில் இருந்து இவ் 6 பேரும் கடந்த ஞாயிற்றுக் கோரிக்கையைப் பலமுறை பிரித்தானிய அரசு நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி)

# துணுக்காய் கல்வி வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை

(மருதங்கேணி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 53 பாடசாலைகளில் ஒரு பாடசாலை மூடப்பட்டுள்ள துடன் மிகுதி 52 பாடசாலைகளி லும் ஆசிரியர் பற்றாக்குறை இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் 52 பாடசாலைகளுக்கு 92 ஆங்கில ஆசிரியர்கள் உட் பட 623 ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற போதிலும் 387 ஆசிரியர்கள் மட்டுமே தற்போது கடமையாற்றுகின்றனர். இதில் 3 பாடசாலைகளில் மாத்திரமே ஆங்கில ஆசிரியர்கள் கடமையாற்றுவதாகவும் மிகுதி 49 பாடசாலைகளிலும் ஆங்கில ஆசிரியர்கள் இல்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ் 49 பாடசாலைகளில் பெரும்பாலானவை உயர்தர வகுப்புக்களைக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-35)

## இடர்கள் கெடுக

# மிதிவெடி விழிப்புணர்வு ஆற்றுகை மூலம் 8,459 மாணவர்கள் பயன்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் துணை நிறுவனமாக இயங்கும் செயற்றிறன் அரங்க இயக்கத்தினர் மிதிவெடிகள், வெடிபொருட்களில் இருந்து மக்கள் தம்மைப் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு விழிப்புணர்வுச் செயற்பாட்டை கடந்த வருடத்தில் இருந்து செயற்படுத்தி வருகின்றனர்.

இந்த ஆண்டு இதன் தொடர்ச்சியாக இச்செயற்பாடு நடைபெற்று வருகின்றது. இச்செயற்பாட்டிற்கு 'இடர்கள் கெடுக' என்று பெயரிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் விரிவுரையாளரான தே.தேவானந்தினால் நெறியாள்கை செய்யப்பட்ட இந்த 'இடர்கள் கெடுக' என்ற நாடகம் மாணவர்கள் மகிழ்ந்து கற்கும் ஓர் செயற்பாடாக, கூடிப் பறைந்து கற்கும் ஓர் அரங்க நிகழ்வாக அமைந்து காணப்படு கின்றது.

இரண்டு மாதங்களுள் 56 தடவைகள் மேடையேற்றப்பட்டுள்ள இந்த நாடகத்தின் மூலம் 8 ஆயிரத்து 459 மாணவர்களுக்கும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கும் மதிவெடி, வெடிபொருட்கள் தொடர்பான அறிவு வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் மிதிவெடியால் பாதிப்புக்குட்பட்ட காரைநகர் பிரதேச, கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இப்பகுதிப் பாடசாலைகளிலும் கிராமங்களிலும் எதிர்வரும் காலத்தில் தொடர்ச்சியாக 20 ஆற்றுகைக்கள் நடை பெறவுள்ளன. (உ)



'இடர்கள் கெடுக' ஆற்றுகை ஒரு காட்சி

## இன்று ஒரு தகவல்

# பாம்புகள்

பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்று கூறுவார்கள். நாம் நடுங்குவதற்குக் கேட்கவா வேண்டும்? அதுவுமில்லாமல் நாம் என்ன, பாம்புக்குமட்டுமா நடுங்குகின்றோம்? பல்லியைப் பார்த்துப் பயப்படுபவர்களும் நம்மில் உள்ளனர். ''பாம்புக்கும் கீரிக்கும் சண்டை மூட்டப்போகின்றேன் பார்த்து விட்டுப் போங்கள்'' என்பார் வித்தை காட்டுபவர். எல்லோரும் அவரைச் சுற்றி அமர்ந்து விடுவார்கள். பாதியில் எழுந்து விடுவார் ஒருத்தர். அதைப்பார்த்வுடன் வித்தை காட்டுபவர் ''யாராவது பாதியில் எழுந்து சென்றால் அல்லது காசு போடாமல் போனால் அவர்கள் வீட்டுக்குச் சென்றதும் கண்ணிலிருந்து இரத்தம் வரும்'' என்பார். எழுந்தவர் மறு படியும் உட்கார்ந்து விடுவார்.

பாம்பிடம் மனிதனுக்கு உள்ள பயத்தைக் காசாக்கும் முயற்சி இது. அது போல் இந்தப்பயத்தை ''பக்தி'' ஆகவும் ஆக்கி விடுவது உண்டு. பாம்புக்கு பழிவாங்கும் உணர்வு உள்ளதாக கூறும் புராணக்கதைகள் உண்டு. தற்போதும் சிலர் வழியில் ஒரு பாம்பை அடித்து, அது அடிவாங்கித் தப்பிச் சென்று விட்டால் மீண்டும் அந்த வழியில் செல்லப்பயப் படுவார்கள். ஏனென்றால் அது திரும்பி வந்து பழிவாங்கி விடுமாம். நல்லவேளை! மறுபடியும் அந்த வழியாகப் போகும் போது மாறு வேஷத்தில் போவோம் என்று யாரும் எண்ண வில்லை. பாம்புக்கு பழிவாங்கும் குணம் உள்ளதாக விஞ்ஞான பூர்வமான ஆதாரம் எதுவுமில்லை.

''நான் ஒரு நல்ல பர்ம்பைப் பார்த்தேன். அதன் தலையில் ஒரு மாணிக்கக் கல் இருந்தது!'' என்று நிஜம் மாதிரிக் கதை விடுவார் ஒருவர். பாம்பின் தலையில் மாணிக்கக்கல் இருப்பதாக நம்புபவரல்ல அவர்! தான் கூறுவதைக் கேட்பவரது தலையில் களிமண் இருப்பதாக நம்புபவர் பாம்பின்தலையில் மாணிக்கமும் இல்லை. வைடூரியமும் இல்லை. சில பாம்புகளின் தலையில் கல்போன்ற திசு உண்டு. கெட்டியான திசு அது. அதில் ஒளி வீசாது. யாரும் அருகில் சென்று பார்த்துக் கொண்டிருக்காதீர்கள்.

மணல் பாம்பு என்று ஒரு வகை அதைப்பற்றி என்னகூறுவார்கள் தெரியுமா? இந்தப்பாம்பின் தலைப்பகுதி வால் உள்ள பக்கத்தில் இருக்குமாம். வால் பகுதி தலைக்குப்போய் விடுமாம். இதுவும் தவறு அந்தப்பாம்பின் வாலும், தலையும் ஒரே மாதிரி இருப்பதனால் வந்த குழப்பம் இது. நாகப்பாம்பும், சாரைப்பாம்பும் இணைந்து இன விருத்தி செய்வதாகக் கூறுவதும் தவறு. இனப்பெருக்கத்தைப் பொறுத்தவரை பாம்பிடம் உள்ள ஒரு விசேடம் என்ன தெரியுமா? பாம்பில் முட்டை போடும் ஒரு வகையும் உண்டு. குட்டி போடும் வகையும் உண்டு. உதாரணமாக நாகப்பாம்பு முட்டைபோடும். விரியன் பாம்பு குட்டி போடும்.

பாம்பிற்கு கண், மூக்கு, நாக்கு எல்லாம் உண்டு. ஆனால் காது இல்லை. அதனால் அவை காற்றின் மூலம் வரும் ஒலி அலைகளை உணர்வதில்லை. பாம்பாட்டி மகுடி வாசிக்கின்றார் என்றால் அதைக்கேட்டு விட்டு அந்த இராகத்தில் மயங்கிப்போய் பாம்பு ஆடவில்லை. மகுடி ஆடுகின்றது. அந்த அசைவைப்பார்த்து விட்டு பாம்பு ஆடுகின்றது. அவ்வளவு தான்! நாமும் சில வேளை இது போல் செய்வது உண்டு. கச்சேரி செய்பவர் என்ன இராகம் பாடுகின்றார் என்பதெல்லாம் தெரியாது. இருந்தாலும் அவரது தலை ஆடுவது புரியும் அதனால் நாமும் தலையை ஆட்டுவோம் இதனால் நமக்குப் பக்கத்தில் இருப்பவரது தலைகூட ஆடத்தொடங்கி விடும்.

அது இருக்கட்டும் பாம்பை விட்டு விட்டு வேறொங்கோ வந்து விட்டோமே! மறுபடியும் பாம்பிடம் செல்வோம் வாருங்கள். பாம்பு தரை மூலம் ஏற்படும் அதிர்வுகளைக் கொண்டு சுற்றுச் சூழலைப் புரிந்து கொள்கிறது. ஒரு சின்ன அதிர்வு இருந்தால் கூட எச்சரிக்கையாகி விடும். நண்டு, சிலந்தி, பல்லி போன்று பாம்பும் தோலினை உரிக்கும். எதனால் இப்படிச் செய்கின்றது என இன்னும் தெரியவில்லை.

பாம்பு தண்ணீர் குடிப்பது அபூர்வமான செயல். நமது ஊரில் கோவில்களில் பாம்புக்கு பால் வைப்பது உண்டு. அதை வந்து பாம்பு குடித்தாலும் அது தண்ணீருக்குப் பதிலாக குடிப்பதாகத்தான் அர்த்தம். பாம்புக்குப் பால் அவசியம் தேவைப்படும் ஒன்றல்ல இருப்பினும் சிறுத்தை, மான், குரங்கு போன்றவற்றை விழுங்கக்கூடிய மலைப்பாம்புகள் உண்டு.

நாகப்பாம்பின் விஷம் மயிலைப் பாதிப்பதில்லை. ஒரு வகையான வான் கோழிகளையும் பாதிப்பதில்லை. பொதுவாக உலகில் உள்ள பாம்புகளில் முக்கால் வாசிக்கு விஷமே கிடையாது. மனிதர்கள் அவ்வப்போது ஏதாவது சாதனை செய்து உலக சாதனைப்பட்டியலில் தனது பெயரும் வர வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருப்பார்கள். சிலர் கண்ணாடி கூண்டு தயார் செய்து அதனுள்ளே நிறைய விஷப்பாம்புகளை விட்டு அவற்றோடு ஆறேழு நாட்கள் தங்கி இருப்பார்கள் அறிந்திருப்பீர்கள்.

அவ்வாறு சாதனை செய்த ஒருவர் பாம்புக்கூண்டினுள்ளே நுழையும் போது துணிச்சலாக நுழைந்தார். சிரித்துக் கொண்டிருந்தார். 10 நாள் கழித்து சாதனை முடிந்து வெளியே வந்தார். உடலெல்லாம் உதற ஆரம்பித்து விட்டது. பக்கத்தில் இருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை ''ஏன் இப்படி ?என்று கேட்டனர் அவரிடம்'' ஒன்றுமில்லை! நான் மீண்டும் எமது வீட்டிற்குப்போய் குடும்பம் நடத்த வேண்டுமே? அந்த ஞாபகம் வந்து விட்டது! அது தான் என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# எல்லைக் கிராமங்களில் தமிழர்கள் வாழ்ந்ததாக வரலாறு இல்லை

## பதவியா பௌத்த விகாராதிபதி

(கிளிநொச்சி)

மணலாறு பதவியாவில் உள்ள கிராமங்களில் தமிழர்கள் வாழ்ந்தமைக்கான எந்தவித ஆதராமும் இல்லை என்றும் அந்நியர் ஆட்சிக் காலத்தில் இங்கு பணிபுரிந்த தமிழ்ப் பொறியியலாளர்சளே திட்டமிட்டு இந்தக் கிராமங்களுக்கு தமிழ்ப் பெயர்களைச் சூட்டி இருக்கிறார்கள் எனவும் பதவியாவில் உள்ள பௌத்த விகாரையின் முதன்மைத் தேரர் கரம்பன் வியன ஸ்ரீ.சாம்பலோகத் தேரரர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், திருகோணமலை என்ற பெயர் கபனாவத எனவும் அதன் பூர்வீகப் பெயர் கோணவனப்பு கந்த எனவும் குச்சவெளி என்பது குஸ்வல எனவும் புல்மோட்டை எனப்படுவது போல் மோட்ட என்றும் முன்னர் அழைக்கப்பட்டது.

எனவே, தேசிய என்பது இந்த நாட்டில் சிங்களவர்களுக்கு மாத்திரமே இருக்கிறது. இதனை விடுத்து சிங்களக் கிராமங்களுக்கு தமிழில் பெயர்களைச் சூட்டி தமிழ்த் தேசியம், தமிழீழ எனக் கூறுவது ஒரு பொருத்தமற்ற கருத்தாகும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மணளாறில் மேலும் நூற்றுக் கணக்காண சிங்களவர்கள் வரவழைக்கப்பட்டு அரசினால் குடி அமர்த்தப்பட்டு வருகின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு குடியமர்த்தப்படுபவர்களில் பெரும்பாலானவர்கள் இராணுவததினரினதும் ஊர்காவற்படையினரினதும் உறவினர்கள் எனவும் கூறப்படுகிறது. (உ-10)

## தொடரும் படுகொலைகள் தொடர்பில்

# தமிழ்ச்செல்வன் நாடு திரும்பியதும் சந்தித்துப்பேச க.கா.குழு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பாரிஸில் இருந்து விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நாடு திரும்பியதும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரிக்கி ரெலிவ்சன் உடனடியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளதாகத் தெரியவருகின்றது.

வட-கிழக்கில் தற்போது இடம் பெற்று வரும் படுகொலைச் சம்பவங்கள் குறித்தே இப்பேச்சுவார்த்தையில் ஆராயப்படவுள்ளது.

தனிப்பட்ட விடயமாக நோர்வே சென்றிருந்த ரெலிவ்சன் கடந்த திங்கட்கிழமை இலங்கை திரும்பியுள்ளார்.

இவர், விடுதலைப்புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் பாரிஸ் செல்வதற்கு முன்னர் அவர்களுடன் இது பற்றிப் பேச்சு நடாத்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டபோதும், அது பயனளிக்காமல் போயிருப்பதாகவும் அவர்கள் நாடு திரும்பியதும் மேற்படி விடயம் பற்றி பேச்சுவார்த்தை நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேலும், வட-கிழக்கில் இடம் பெற்று வரும் அரசியல்நோக்கம் கொண்ட கொலைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசாங்கம் தம்மை வலியுறுத்துவதாகவும் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. (உ-18)

## இராசி பலன்

**21. 08. 2003**

(ஆவணி ~04, வியாழன்)

நவமி- மு. இ 9.07 வரை
ரோகிணி - மு.இ 11.56 வரை
இராகுகாலம் - 1.35- 3.05
சுபநேரம் - 7.35-9.05

**மேடம்**
கடுமையான வார்த்தை, தொழில் கஷ்டம், காரிய தாமதம், திடீர் நன்மை.

**இடபம்**
ஜனவசியம், பெரியோர் சந்திப்பு, தெய்வானுகூலம், நல்ல முயற்சி.

**மிதுனம்**
காரிய அலைச்சல், அதிகாரிகள் ஒத்துழைப்பு, சயனசுகக்குறைவு, சுப செலவு.

**கடகம்**
எடுத்தகாரியம் கைகூடும், வாக்கு மேன்மை, தொழில் நன்மை, குடும்ப சுகம்.

**சிங்கம்**
கடின முயற்சி, பிறருக்கு உதவுதல், சிந்தனை மிகுதி, தொழில் நன்மை

**கன்னி**
புதிய முயற்சி, கட்டுப்பாடு, பிரயாணம், தனவிரயம்.

**துலாம்**
உடல் வியாதி, உறவினர் வெறுப்பு, எதிர் பாராத நன்மை, வாகன பயம்.

**விருச்சிகம்**
குடும்ப சுகம், காரிய சித்தி, தொழில் நன்மை, தனலாபம்.

**தனுசு**
புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, திடீர் பயணம், உடல் நலம்.

**மகரம்**
புத்திரரால் கவலை, பெரியோரால் வெறுக்கப்படுதல், காரிய தாமதம், உடல் நலக்குறைவு.

**கும்பம்**
மாதாவழி உறவு, ரோகநிலை, முயற்சி தாமதம், வாகன சுகம்.

**மீனம்**
கூட்டு முயற்சி, தனவரவு, உறவினர் வருகை, போசன சுகம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# பாதுகாப்பு அதிகரிக்காமை குறித்து காணி அமைச்சர் மனக்குறை

(கொழும்பு)



தன்னைக் கொலை செய்வதற்கான முயற்சிகள் நடை பெற்று வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும், இது வரை தமக்குரிய பாதுகாப்பு அதிகரிக்கப்படவில்லை என காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண குற்றம் சாட்டியுள்ளார்.

பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினர் ஒருவர் என்னைக் கொலை செய்ய முயற்சி எடுத்து வருவதாக பொலிஸார்வெளியிட்ட தகவல் 48 மணித்தியாலங்களை கடந்துள்ள போதிலும், இது வரை எவ்வித பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

என்னைக் கொலை செய்ய சதித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது போல, மேலும் பல அமைச்சர்கள், அதிகாரிகளை கொலை செய்வதற்கான சதித்திட்டங்கள் வெளியாகியுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, காணி அமைச்சருக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரிவினருக்கும் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (தி)

# சேமலாப நம்பிக்கை நிதியங்களை இணைக்க நடவடிக்கை

(கொழும்பு)

சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றைக் ஒன்றிணைப்பதற்கான வழிவகைகள் குறிதது தற்போது ஆராயப்பட்டு வருகிறது.

இவ்விரு நிதியங்களின் வைப்பில் உள்ள 32 ஆயிரம் கோடி ரூபாவை சிறப்பாகப் பேணும் வகையில், அவற்றை எவ்வாறு இணைக்கலாம் என்பது குறித்து ஆராய்வதற்காக ஆலோசகர் ஒருவரும் நியமிக்கப்படவுள்ளார்.

இவ்விரு நிதியங்களுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் இவற்றைப் பெறுவோர் கையாளும் நடைமுறைகள் எளிதாகும் என மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

28ஆயிரம் கோடி ரூபாவை மத்திய வங்கியின் கீழ் ஊழியர் சேமலாப நிதியமும், 4 ஆயிரம் கோடி ரூபாவை தொழில் அமைப்பின் கீழ் ஊழியார் நம்பிக்கை நிதியமும் பேணி வருகின்றன. (தி)

# வரிச்சலுகை வழங்கப்பட்டதால் திறைசேரிக்கு 2000 கோடி இழப்பு

(கொழும்பு)

வரி செலுத்தாது தவிர்த்து வந்தவர்களுக்கு வரி மன்னிப்புச் சட்டத்தின் மூலம் அரசாங்கம் சலுகை அளித்ததால் 2000 கோடி ரூபாவை திறைசேரி இழந்துள்ளது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத் கம்பஹா மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசுகையில், இவ்வாறு வருமானத்தை இழந்துள்ள அரசாங்கம், திறைசேரியில் நிதி இல்லை எனக்கூறி சமுர்த்தி மற்றும் உரவகைகளுக்கான மானியத்தை நீக்கி வருகிறது.

இதேவேளை, நட்டத்தில் இயங்கும் 29 நிறுவனங்களை விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது எனவும் அவர் அங்கு சுட்டிக்காட்டியுள்ளார். (தி)

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப்படும் - குறள்

# வலம்புரி

## புலிகளின் உத்தரவாதம்

வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால சபைக்கு முன்மொழியப்படும் திட்டவரைபில், முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

அரசு சமர்ப்பித்துள்ள இடைக்கால சபைக்கான திட்டவரைபை ஆராயும் பொருட்டு பாரிஸ் புறப்படும் முன்னர் செய்தியாளர்களிடம் பேசும் போதே தமிழ்ச்செல்வன் மேற்போந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

விடுதலைப் புலிகளிடம் இடைக்கால சபையை வழங்கிவிட்டால் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக் கேள்விக்குறியாகி விடும் எனக் கோஷமிடும் முஸ்லிம் கட்சிகளுக்கு, தமிழ்ச்செல்வனின் உறுதிமொழி நல்ல பதிலடியாகவே அமைந்துள்ளது. வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால சபையை விரும்பாத முஸ்லிம் கட்சிகள் அதற்கெதிராக பெரும் பிரசாரத்தை மேற்கொண்டு, முஸ்லிம் மக்களிடையே தமிழின விரோதத்தை ஏற்படுத்துவதில் முனைப்புடன் செயலாற்றிக் கொண்டிருக்கும் வேளையில், தமிழ்ச் செல்வன் தெரிவித்த கருத்து முஸ்லிம் மக்களைச் சிந்திக்க வைப்பதாக உள்ளது.

விடுதலைப் புலிகளின் ஆட்சியைத் தாம் ஏற்றுக்கொள்ள முடியாதென தெரிவித்துள்ள அமைச்சர் ஹக்கீம், வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதில் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறார்.

இருபது வருடகால யுத்தத்தில் 17ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளை இழந்துள்ள அதேநேரம், சுமார் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களையும் இழந்த நிலையில், சமாதான முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தால் நலிந்துபோன தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு விடுதலைப் புலிகள் இணங்கிக் கொண்டு சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுவரும் வேளையில், வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தனித்தனி மாகாணமாகப் பிரிப்பதற்கு முஸ்லிம் கட்சிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளைக் குழப்பும் சதித்திட்டமாகும்.

இனப்பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு எட்டப்படாத நிலையில் முஸ்லிம்கள் முந்திக் கொள்வது அவ்வளவு நாகரிகமானதாகத் தெரியவில்லை.

சமாதான முயற்சிகள் தேக்கமடைந்துள்ள போது, அத்தேக்கநிலையைச் சீராக்கி அரசு - புலிகளுக்கிடையிலான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு உதவி செய்யவேண்டிய முஸ்லிம் தலைவர்கள் அதற்கு மாறாக நடந்து கொள்வது எதிர்காலத்தில் இலங்கை சிங்கள - தமிழ் - முஸ்லிம் நாடுகளாகக் கூறுபடும் அறிகுறிகளையே காட்டி நிற்கின்றது.

காலத்திற்குக் காலம் ஆட்சியில் அமரும் சிங்களக் கட்சிகளுடன் சேர்ந்துகொண்டு அமைச்சுப் பதவிகளையும், அதிகாரங்களையும், சலுகைகளையும் பெற்றுக்கொள்ளும் முஸ்லிம் தலைவர்கள் இப்போது சந்தர்ப்பம் பார்த்து வடக்கையும், கிழக்கையும் பிரிக்க திட்டம் தீட்டுவதை முஸ்லிம் மக்கள ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்பதுடன், தமிழ்ச்செல்வன் வழங்கிய வாக்குறுதியை அவர்கள் கருத்திற் கொண்டு செயற்படுவதும் காலத்தின் கட்டாய தேவையாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழ், முஸ்லிம் மக்களின் தாயகமாகும். இதனைக் கூறு போட்டு, தமிழ் - முஸ்லிம் சகோதர உறவைக் கலைக்கும் சதி முயற்சியை முறியடிக்க அனைவரும் ஒன்றுதிரள வேண்டும்.

# தமிழ் மக்களின் எதிர்காலத்தை வளமாக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆவலாக உள்ளது

## யாழ். வந்த பிரதித்தூதுவர் ஹெட் லெஹான்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கான நல்லதோர் எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பதில் அவுஸ்திரேலிய அரசு ஆவலாக உள்ளது என அவுஸ்திரேலியாவின் இலங்கைக்கான பிரதித்தூதுவர் ஹெட்லெஹான் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்த இவர் மு.ப. 10.30 மணியளவில் யாழ். அரச செயலகத்தில் வைத்து யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் மற்றும் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் பி.சுந்தரம்பிள்ளை ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் தற்போதைய அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளை இவர் விபரமாகக் கேட்டறிந்தார்.

இக்கலந்துரையாடலின் போது, யாழ். செயலக அதிகாரிகளால் யாழ். மாவட்டத்தில் மீள் குடியேற்றம், அதியுயர் பாதுகாப்பு வலயங்களால் மீள் குடியமர்வதில் உள்ள இடர்கள் மற்றும் பாஸ் நடைமுறை, சோதனைக் கெடுபிடிகள் காரணமாக இயல்பான முறையில் கடற்றொழில் செய்வதில் உள்ள சிக்கல்கள் குறித்து சுட்டிக் காட்டப்பட்டது.

அத்துடன் இராணுவம் புதிய முகாம்களையும், காவலரண்களையும் அமைப்பதையும் அதனால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள விதமும் தெளிவுபடுத்தப்பட்டது.

இதேவேளை, தென்மராட்சியில் மீளளிப்புச் செய்யப்பட்ட 100 ஏக்கர் பயிர்செய் நிலத்தில் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் விசேட அடையாள அட்டை பெற வேண்டும் என படையினரால் நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பது குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

இச்சந்திப்பை முடித்துக் கொண்டு யாழ். நூலகத்தைச் சென்று பார்வையிட்ட ஹெட் லெஹான் நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்களை வழங்க தமது அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (உ-4)



# கிழக்கிற்கு பெருமளவு படையினர் விரைவு இனங்களுக்கிடையிலான விரிசலுக்கு வாய்ப்பு

## அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கடந்த சில தினங்களாக மூதூர் பகுதியில் உள்ள தமிழ் மக்கள் பெரும் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். இதன் காரணமாக அங்குள்ள தமிழர்களின் கடைகள் யாவும் தொடர்ந்தும் பூட்டப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூதூரில் இரு முஸ்லிம் மீனவர்கள் அண்மையில் கடத்தப்பட்டமை, சம்மாந்துறையில் இரு முஸ்லிம் விவசாயிகள் கொலை செய்யப்பட்டமை ஆகிய சம்பவங்களினையடுத்து கிழக்கு மாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே அதிருப்தி நிலை தோன்றியுள்ளமை தெரிந்ததே.

இந்நிலையில், அங்குள்ள முஸ்லிம் மக்களுக்கு பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் அங்குள்ள தமிழ் மக்களிடையே பெரும் பதட்ட நிலை தோன்றியுள்ளதாகவும் அச்சம் காரணமாக இரவு வேளைகளில் அவர்கள் மூதூரில் உள்ள அந்தோனியார் ஆலயத்திலும் மெதடிக்ஸ் தேவாலயத்திலும் தஞ்சம் புகுவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, மூதூர் மற்றும் சம்மாந்துறைப் பிரதேசங்களில் பெருமளவு பொலிஸாரும், இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமைக்கென அனுப்பப்பட்டுள்ளமையினையடுத்து தமிழ்-முஸ்லிம் சமூகங்களிடையே மேலும் விரிசலை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு தோன்றியிருப்பதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-10)

## சமுர்த்தி வங்கிக் கட்டடம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சமுர்த்தி வங்கிக்குரிய கட்டடம் ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள அரச காணியில் அமைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே அமைக்கப்பட்டு வரும் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகக் கட்டடம், சுற்றுலா விடுதி ஆகியவற்றுக்கு அருகில் ஊர்காவற்றுறை சமுர்த்தி வங்கிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி வங்கிக் கட்டடம் அமைப்பதற்கான நிதியினை சமுர்த்தி அதிகார சபை வழங்கவுள்ளதாக அறியப்படுகின்றது. (பி-5)

# ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்வோர் அதிகரிப்பு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் பதிவு செய்துள்ள தொழில் தருணர்களினதும், தொழிலாளர்களதும் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கொள்கைத்திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, இவ்வருடத்தின முதல ஆறு மதங்களில் 3ஆயிரத்து 616 தொழில் தருணர்களும் 11 ஆயிரத்து 871 தொழிலாளர்களும் ஊழியர் சேமலாப நிதியத்தில் புதிதாக அங்கத்துவம் பெற்றுள்ளனர்.

கடந்த வருட முதல் 6 மாதங்களுடன ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை 38 சதவீதத்தால் அதிகரித்துள்ளதென கொள்கைத்திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இவ்வருடமுதல் 6 மாதத்தில் 2 ஆயிரத்து 512 தொழில் தருணர்களும், 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். (தி)

# நீதிமன்றில் ஆஜராவதை தவிர்க்கும் ஜானகபண்டார

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் ஜானக பண்டார தென்னக்கோன் நீதிமன்றத்தில் ஆஜராவதை தவிர்த்து வருகிறார்.

மஜிஸ்திரேட் நீதிமன்றத்தினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட போதும், நோய்வாய்ப்பட்டு தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருவதாக அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நேற்று முன்தினம் தெரிவித்தார்.

தம்புல்ல மஜிஸ்திரேட் நீதவான் பாராளுமன்ற உறுப்பினர் தொடர்பான விசாரணைகளை நடத்தி உரிய உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதவானைக் கோரியுள்ளார்.

இதன்படி, இவ்வழக்குத் தொடர்பான அடுத்த நடவடிக்கைகளை கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதவான் மேற்கொள்ளவுள்ளார். (தி)

# கனடாவில் இடம்பெற்ற ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டியில் இலங்கை மாணவர்கள் முதலிடம்

(கொழும்பு)

கனடாவின் றொறன்ரோ மாகாணத்தில் உள்ள ஸ்காபறோ பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டியில் இலங்கைத் தமிழ் மாணவர்கள் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

கனடா, இந்தியா, சீனா, இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து சுமார் 150 மாணவர்கள் பங்குபற்றிய இப்போட்டியில் கீழ்ப்பிரிவில் அஸ்வின் பாஸ்கரனும், மத்திய பிரிவில் கிருத்திகா விமலகாந்தனும், மேற்பிரிவில் தூலக்ஷன் ஸ்ரீதரனும் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

ஆரென்ஸ்கந்தராசா, பிரியங்கா யோகலிங்கம் ஆகியோர் இரண்டாம் இடங்களைப்பெற்றுள்ளனர். (உ-10)




## சாயி அருளமுதம்

எவரொருவர் இறைவனைத் தமது ஸாரதியாக நிலை நிறுத்திக் கொள்கின்றாரோ அவருக்கு இறைவன் வழிகாட்டியாவார். அந்த நிலையை ஒரு தாழ்வானதாக இறைவன் கருதுவதில்லை. எல்லோருக்கும் ஸாரதியாக இருப்பதற்கு வந்த ''ஸநாதனஸாரதி'' அவரே. ஒரு தலைவனைத் தேடி நிற்கும் யாவருக்கும் அவரே இறைவன். அவரே ஆதாரம். ஒவ்வொருவருக்கும் உள்ளேயிருக்கும் தலைவனே ஆத்மாவாகும். அதேசமயம் பரமாத்மாவே கிருஷ்ணர் என உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை


# தேர்தல் வன்முறையில் ஈடுபடுவோரின் குடியுரிமையைப் பறிக்கவேண்டும்

## எரிபொருள் துறை அமைச்சர் கருத்து

(கொழும்பு)

தேர்தல் வன்முறையில் ஈடுபடுவோருக்கு அவர்களது குடியுரிமைகளைப் பறிப்பது போன்ற கடுமையான தண்டனைகளை வழங்க வேண்டும் என மின் சக்தி எரிபொருள் துறை அமைச்சர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

வானொலி நிலையம் ஒன்றுககு அளித்த விசேட பேட்டியின் போதே அமைச்சர் இதனைத்தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அமைச்சர் தேர்தல் காலங்களில் வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன.

அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இது போன்ற நடவடிக்கைகள் அத்தியாவசியமானது.

பொது மக்களின் வாக்களிக்கும் உரிமையைப் பறிக்க முயலும் செயல்கள் மனிதாபிமானத்துக்கு அப்பாற்பட்டவை.

ஒழுக்கம் நிறைந்தவர்களை வேட்பாளர்களாக நியமிப்பதற்கு அரசியல்கட்சிகள் ஊக்கம் காட்டினால்இந்த நிலையை மாற்ற முடியும்.

தேர்தல் முறையை திருத்தி அமைப்பதற்கான யோசனைகள் மூலம் வன்முறைகளுக்குத் தீர்வு காண முடியும்.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்குத் தேவையான அனைத்து வழங்களையும் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தயாராகவுள்ளது.

இதற்கு தேர்தல்முறை [illegible] அமைக்கப்படுவது அவசிய[illegible]வும் அவர் மேலும் தெரிவ[illegible]ளார். (தி)

## விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் அரசடி வீதி பழம் வீதிச்சந்திப்பகுதியில் நேற்று முற்பகல் வேளை இடம்பெற்ற சைக்கிள்-மோட்டார் சைக்கிள் விபத்தில் சைக்கிளில் வந்தவர் படுகாயமடைந்தார்.

லண்டனில் வசிப்பவரான நல்லூர் சிவன்கோவிலடியைச்சேர்ந்த எஸ்.ஸ்ரீஸ்காந்தராசா என்பவரே விபத்தில் படுகாயமடைந்தவரா[illegible]

இவர் பயணம்செய்த [illegible] கடும்சேதத்திற்குள்ளாகி[illegible]

# முகமாலையில் போராளி கைது படையினரின் திட்டமிட்ட சதி

## இளம்பரிதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

முகமாலைச் சோதனைச் சாவடியூடாக புலிப் போராளிகள் ஆயுதங்களைக் கடத்த முற்பட்டதாக படையினராலும், பொலிஸாராலும் கூறப்படுவது வேண்டுமென்றே திட்டமிட்டு புனையப்பட்ட ஒரு சம்பவமாகும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை முகமாலைச் சோதனைச் சாவடியில் போராளிகள் கைது செய்யப்பட்டதாக வெளியான செய்தி தொடர்பாக உண்மைநிலையை விளக்கும் பொருட்டு நேற்று மாலை அரசியல்துறைப் பொறுப்பாளர் பத்திரிகையாளர்களுடன் சந்திப்பொன்றை நடத்தினார். இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மானிப்பாயைச் சேர்ந்த ஆறுமுகம் கிருபாகரன், அரியகுமார் சாந்தகுமார் ஆகிய இருவரும் எமது அரசியல் பணிமனை சமயல் பணியாளரான இமயவனுடன் சுய விருப்பின் பேரில் சமயற் பணிக்காக கிளிநொச்சிக்குச் சென்றுகொண்டிருந்தனர்.

நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் இவர்கள் முகமாலைச் சோதனைச் சாவடியைச் சென்றடைந்தபோது, சில தீய சக்திகளின் திட்டமிட்ட வழிகாட்டலால் உண்மை நிலையை அறியாத கிருபாகரனின் வளர்ப்புத் தாயாரிடம் இருந்து பெற்ற வாக்குமூலத்திற்கு அமைவாக முகமாலைச் சோதனைச் சாவடியில் வைத்துப் பொலிஸாரும், படையினரும் அச்சுறுத்தி அவர்கள் இருவரிடம் இருந்தும் வாக்குமூலம் பெற்றிருந்தனர்.

இந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் இம்யவனைப் பொலிஸார் கைது செய்தனர். சாதாரண ஒருவர் 24 வயதை அண்மித்த அந்த இளைஞர்களை எவ்வாறு கடத்திச்செல்ல முடியும்? இது வேண்டுமென்றே திட்டமிட்டு சோடிக்கப்பட்ட சம்பவமாகும்.

இதேவேளை, மேற்படி சம்பவம் சோதனைச் சாவடியில் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் அங்கு சென்ற போராளி புகழ்மாறனை அச் சம்பவத்துடன் தொடர்புபடுத்தி அவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது உண்மையில் யுத்தநிறுத்த மீறல் சம்பவமாகும். இது குறித்து நாங்கள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளோம். அத்துடன் நாம் ஆட் கடத்தலிலோ அன்றி ஆயுதக் கடத்தலிலோ, ஈடுபடவில்லை. வேண்டுமென்றே நாம் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டதாகப் படைத் தரப்பினரால் சோடிக்கப்பட்டுள்ளது.

தவிரவும், போராளியிடம் இருந்து படையினர் சைனற் குப்பியைப் பறிப்பதற்கும், போராளி அனுமதிக்கவில்லை. அத்தகைய சம்பவங்கள் தொடர்பாக நாங்கள் மேல் நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம் என்று செய்தியாளர்களுடனான சந்திப்பில் இளம்பரிதி மேலும் தெரிவித்தார். (த-5)

# பாரிஸ் மாநாடு இன்று கூடுகிறது

இலங்கை அரசினால் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபு குறித்து ஆராய்வதற்கான மாநாடு இன்று பாரிஸில் ஆரம்பமாகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ள இம்மகாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் 10பேரும், மலேசியா,சிங்கப்பூர்,அவுஸ்ரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து 10பேரும் கலந்து கொள்கிறார்கள்.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக அரசு சமர்ப்பித்துள்ள யோசனைகள் இம்மாநாட்டில் தீவிரமாக ஆராயப்படவுள்ளன.

பாரிஸில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உடல்நிலை காரணமாக கலந்து கொள்ளாத போதும் மாநாட்டின் பின்னர் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான பதில் திட்ட வரைவு குறித்து அன்ரன் பாலசிங்கத்துடன் ஆலோசிக்கப்படவுள்ளதாகவும், அதன் பின்னர் பாரிஸ் குழுவினர் வன்னி திரும்பி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் கலந்தாலோசித்த பின் நோர்வேயூடாக இடைக்கால நிர்வாகசபைத் திட்ட வரைபு அரசுக்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

# மண்டைதீவு வான்மதி நடத்தும் மெய்வல்லுநர் போட்டி 23இல்

(மண்டைதீவு)

மண்டைதீவு வான்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் மெய்வல்லுநர் போட்டிகளின் இறுதி நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும்.

மண்டைதீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும் இறுதி நிகழ்வைத் தொடர்ந்து பரிசளிப்பு வைபவமும் இடம் பெறவுள்ளது. மேற்படி விளையாட்டுக்கழகம் நடத்திய மரதன் ஓட்டப்போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலாம் இடம் பா.பாஸ்கரன், 2ம் இடம் கு.வதனராஜா, 3ம் இடம் சு.சுபதீபன்,

பெண்கள் பிரிவில் முதலாம் இடம்- ம.கார்த்திகா 2ம் இடம்:- வ.தவவதனா ,3ம் இடம்: நா. தசோகினி

சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலாம் இடம் :கு.வதனராஜா . 2ம் இடம்:ச.உதயகாந்த் ,. 3ம் இடம்: அ.அற்புதசிங்கும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ந)

# தமிழீழ மீட்பு நிதி மீளளிக்கப்படும்

(கிளிநொச்சி)

தமிழீழ மீட்பு நிதிக்கடன் திட்டத்தின் கீழ் கடன் கொடுத்தவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து ஐந்நூறு பேரின் கடன் அடுத்த மாதம் 16ம் திகதியில் இருந்து 21ம் திகதி வரை தமிழீழ நிதித்துறையினரால் மீளளிக்கப்படவுள்ளது.கடன் மீளளிக்கப்படவுள்ளோரின் பெயர் விபரம் வலம்புரியில் வெளியிடப்படும். (இ-3)

# நாரந்தனைக் கொலை வழக்கு சாட்சிகள் இருவருக்கு பிடியாணை

(யாழ்ப்பாணம்)

நாரந்தனைக் கொலை வழக்கு சம்பந்தமான சாட்சிகள் இருவருக்கு எதிராக, யாழ் மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா பிடியாணை பிறப்பித்துள்ளார்.

கடந்த 2000ம் ஆண்டு தீவகப் பிரதேசத்துக்கு தேர்தல் பிரசாரத்துக்காகச் சென்ற கூட்டமைப்பு உறுப்பினர்கள் மீது நாரந்தனைப் பகுதியில் தாக்குதல் இடம்பெற்றமை தொடர்பாகவும் அதில் இருவர் மரணமடைந்தமை தொடர்பாகவும் சாட்சிகள் இருவரிடமும் விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவே பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கின் 7ம்,10ம் சாட்சிகளான அரசடி வீதியைச் சேர்ந்த தி.ரவீந்திரன் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த ந.கணேஸ் ஆகிய இருவரையும் கைது செய்யுமாறு ஊர்காவற்றுறைப் பொலிசாருக்கு நீதிபதி உத்தர விட்டுள்ளார். (இ-4)

## நல்லூர்க் கந்தனின்...

உணர்வை அது பக்தர்களிடையே ஏற்படுத்தியது. இவைதவிர முருகப் பெருமான் வெளிவீதி உலா வந்தபோது, நூற்றுக்கணக்கான பெண்கள் கற்பூரச் சட்டி ஏந்திவந்த காட்சியும், தீவட்டிகள் தாங்கிவரப்பட்ட காட்சியும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. வீதியுலா நிறைவுற்றதும், ஆலய உள்வீதியில் ஆறு இடங்களில் இசை வேள்வி இடம்பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. கார்த்திகை உற்சவத்தை ஒட்டி நேற்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்தில் கூடியிருந்தனர். (ந)

## 500 முஸ்லிம்...

தன் மூலம் பாதுகாப்பை அதிகரிக்க முடியுமென்றும் ஆட்சேர்ப்புக்காக விளம்பரம் செய்யப்பட்டுள்ளதென்றும் முஸ்லிம் மக்கள் முன்வந்து பொலிஸ் சேவையில் இணைந்து கொள்ளவேண்டுமென்றும் ஆனந்தராஜா மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை அதிகரிக்க அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பிரதமரை வலியுறுத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## முஸ்லிம்களின்...

காட்டிய கூட்டமைப்பு எம்.பிக்கள் தனியான பொலிஸ் சேவைக்கு முஸ்லிம் இளைஞர்களைச் சேர்ப்பதை முற்றாக நிறுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

ஏற்கனவே முஸ்லிம் இளைஞர்கள் ஊர்காவல் படையில் சேர்க்கப்பட்டிருப்பதனால், தமிழ்மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளையும் கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரதமரிடம் சுட்டிக்காட்டி தமது ஆட்சேபனையைத் தெரிவித்தனர்.

கூட்டமைப்பு எம்.பிக்களின் ஆட்சேபனையைச் செவிமடுத்த பிரதமர் இப்பிரச்சினைகள் குறித்துக் கவனம் எடுப்பதாகவும், இது தொடர்பாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவையும், பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவையும் சந்தித்து எடுத்துக் கூறுமாறும் கூட்டமைப்பு எம்பிக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனையடுத்து கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று காலை 10.30 மணிக்கு உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவையும் பொலிஸ்மா அதிபரையும் சந்தித்துப் பேசவுள்ளனர். (ம-5)


நல்லைக்கந்தன் உற்சவகால தெய்வீக நிகழ்ச்சிகள் - 2003

இடம்:- அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடம் தேரடி

காலம்:- இன்று (21.08.2003) வியாழக்கிழமை ஈழத்து சுந்தராம்பாள் திருமதி வயலற் சந்திரசேகரம் பாட்டு

நாளை (22.08.2003) வெள்ளிக்கிழமை ஈழத்து சுந்தராம்பாள் திருமதி வயலற் சந்திரசேகரம் வில்லுப்பாட்டு ''பட்டனத்தடிகள்''

அனைவரையும் கலந்து சிறப்பித்து ஈழத்து சித்தர்கள் உலாவிய மண்ணில் அமர்ந்து நிகழ்ச்சிகளை கேட்டு செய்வீகத்தை உணருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(சி-6575) வடபிரதேச இந்துப் பேரவை.


## வலம்புரியின்...

வதிலுமுள்ள பல்கலைக் கழகங்களின் போதனைசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் பற்றிய ஆசிரியர் கருத்து பிரசுரமாகியிருந்தது. பல்கலைக் கழக ஊழியர்களின் கோரிக்கைகள் நியாயமானவை என அதில் ஏற்றுக்கொள்ளப்பட்டது குறித்து மகிழ்ச்சியடைகின்றோம். எனினும் அங்கு குறிப்பிடப்பட்ட வேறுசில கருத்துக்கள் தீர ஆராய்ந்து பின் வெளியிடப்பட்ட கருத்துக்கள் அல்ல என கருதுகிறோம்.

பல்கலைக் கழக ஊழியர்கள் அடிக்கடி வேலைநிறுத்தம் செய்கின்றார்கள் என்றால் அவர்களுக்குத் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உள்ளன என்பதே காரணமாகும். அப்பிரச்சினைகள் தொடர்பாக மீண்டும் மீண்டும் கோரிக்கை விடப்பட்டும், பலனளிக்காத நிலையிலேயே இவ் வேலைநிறுத்தத்திற்கான முடிவு எடுக்கப்பட்டது. ஊழியர் சம்பள முரண்பாடு தொடர்பாக 1997இல் இருந்தே குரல் எழுப்பப்பட்டு வருகின்றது. இவ்விடயம் குறித்து ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட குழுக்களின் பரிந்துரைகளும் நடைமுறைப் படுத்தப்படாத நிலையில்தான் வேலை நிறுத்தம் செய்யவேண்டிய நிலைக்கு ஊழியர்கள் தள்ளப்பட்டனர்.

பல்கலைக் கழக ஊழியர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமைக்கு பல்கலைக் கழகங்களின் நிர்வாகச் சீர்கேடும் முக்கியமானதொரு காரணமாகும். உதாரணமாக யாழ். பல்கலைக் கழகத்தினை எடுத்துக் கொண்டால் துணைவேந்தர் தெரிவு, பேரவை உறுப்பினர் தெரிவு போன்றவற்றில் அதிகாரத்தில் உள்ள அதிகாரிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளனர்.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டவர்கள் தமக்கு நியாயம் பெற்றுத் தந்தவர்களின் நலன்களைப் பேணுவதிலேயே குறியாகவுள்ளனர். பேரவைக் கூட்டம் தொடங்கும் நேரத்திற்குச் சமூகமளித்து கொடுப்பனவுப் படிவத்தில் கையொப்பமிட்டு விட்டு வெளியேறிச் சென்று பின்னர் மதிய உணவிற்காக மீண்டும் சமூகந்தரும் பேரவை உறுப்பினர்கள் உண்டு. கூட்டம் நடைபெறுவதற்கு முன் தினமே கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளும் உறுப்பினரும் உண்டு. இத்தகையோர் பல்கலைக் கழகக் கல்வி மற்றும் மாணவர், ஆசிரியர்கள், ஊழியர்களின் நலன்களில் அக்கறையுடன் செயற்படுவார்களா? பல்கலைக் கழக நிர்வாகத்தில் அதியுயர் அமைப்பான பேரவை உறுப்பினர்களின் செயற்பாடு இவ்வாறு அமையுமாயின், பல்கலைக் கழக நிர்வாகம் சீர்கெடுவது தவிர்க்க முடியாததே.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் உட்படப் பல்கலைக் கழகங்களின் நிதி நிர்வாகக் குறைபாடுகளால் பல லட்சம் ரூபா பணம் விரயம் செய்யப்படுவது பற்றி அரசாங்கக் கணக்காய்வு அறிக்கைகள் சுட்டிக் காட்டியும், காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவோ அரசாங்கம் முன்வரவில்லை.

இதனால், பல்கலைக் கழக நிதி வளத்தில் ஏற்பட்ட பற்றாக்குறைக்கு இதுவும் ஒரு காரணமாகும். யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் விடுதிக்கென அண்மையில் யாழ். நகருக்கும் அப்பாலுள்ள ஒரு பிரதேசத்தில் அதிகாரியொருவரின் உறவினர் இல்லம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. திருநெல்வேலியில் பல்கலைக் கழகச் சுற்றாடலில் வேறுவீடுகள் உரிய வசதிகளுடன் இருந்தும் அவை தெரிவுசெய்யப்படவில்லை.

மேலும் இவ்விடுதியின் காப்பாளராக 67 வயது முதியவர் ஒருவர் ஆட்சேர்ப்பு விதிக்கு முரணாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சர் ஒருவர் தனது தனிப்பட்ட வாகனத்தை பல்கலைக் கழகத் தேவைக்கு இலவசமாக வழங்குவதாகக் கூறி, கூடவே ஓட்டுநர் பணிக்கு தனது ஆதரவாளர் ஒருவரையும் நியமனம் செய்துள்ளார். அவருக்கு பல்கலைக் கழக நிர்வாகப் பணிக்கு வராத நாட்களுக்கும் சேர்த்து சம்பளம் வழங்கி வருகின்றது. அவ்வாதரவாளர் பெயரை மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சின் ஊடாகப் பல்கலைக் கழக ஆட்சேர்ப்புப் பட்டியலில் இணைத்து விட்டுத் தனது வாகனத்திற்கு வாடகை வழங்குமாறு மூன்றாம் நிலைக் கல்வியமைச்சின் ஊடாக அமைச்சர் அழுத்தம் கொடுத்து வருகின்றார்.

பல்கலைக் கழகத்தில் ஊழியர் அபிவிருத்தி மையம் ஒன்று உண்டு. இந்த அபிவிருத்தி மையப் பணியாளருக்கு ஊழியர்களின் மொத்தத் தொகையின் அடிப்படையில் (போதனை சாரா ஊழியர் உட்பட) கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. ஆனால், இதுவரை இம்மையம் போதனை சாரா ஊழியருக்கு எந்தப் பயிற்சியும் வழங்கப்படவில்லை.

மாணவர் கல்வி பற்றி அக்கறைப் படுவதாகக் கூறிக்கொள்பவர்கள் யாழ். பல்கலைக் கழக வெளிவாரிக் கற்கைநெறிப் பரீட்சைப் பெறுபேறுகளில் ஏற்பட்ட குளறுபடிகளால் மாணவர்கள் பாதிக்கப்பட்டது பற்றியோ. தற்போது இதனால் வெளிவாரிப் பரீட்சைகள் தடைப்பட்டுள்ளது பற்றியோ ஊடகங்கள் ஊடாக எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை. இக் குளறுபடிகளுக்குக் காரணமான பல்கலைக் கழக அதிகாரிகளின் செயற்பாடுகளை வெளிக்கொணர இவர்கள் ஏன் தயங்குகின்றார்கள் என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும்.

நாடுமுழுவதிலுமுள்ள பல்கலைக் கழகங்களில் இடம்பெறும் இவ்வாறான சீர்கேடுகள்தான் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ இவ் வேலை நிறுத்தத்திற்கு வித்திட்டன.

ஏனைய ஊழியர்களுடன் ஒப்பிடுகையில், பல்கலைக் கழக போதனை சாரா ஊழியர்களின் சம்பள அளவு திருப்தியானது என்ற கூற்று தீர ஆராயாமல் கூறப்பட்டதாகும்.

பல்கலைக்கழக மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் ஊழியர்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர். அவ் ஊழியர் பிள்ளைகளும், சகோதர சகோதரிகளும் பல்கலைக் கழகத்தில் மாணவர்களாய் உள்ளனர்.

பல்கலைக் கழக மாணவர்களின் கல்வியாண்டு நீடித்துச் சென்றமைக்குப் பல காரணங்கள் உண்டு. ஊழியர்களின் போராட்டம் மாணவர் கல்வி பாதிக்கப்படும் சதவீதம் ஒப்பீட்டு ரீதியில் மிகவும் குறைவானதே.

பல்கலைக் கழகப் போதனை சாரா ஊழியர்கள் மிகுந்த சமூகப் பொறுப்புணர்வு உடையவர்கள். 1995 இன் பின்னான இருண்ட ஏழு ஆண்டுகளில் யாழ். பல்கலைக் கழக ஊழியர்களின் செயற்பாடுகள் இதை உணர்த்தும்.

அனைத்துப் பல்கலைக் கழகங்களின் ஊழியர் தொழிற் சங்க சம்மேளனத்தில் யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கம் ஒரு அம்சமாகும்.

எமது பல்கலைக் கழக ஊழியர் பிரச்சினைகளும், சம்மேளனத்தின் கோரிக்கைகளில் அடக்கப்பட்டுள்ளன.

எனவே, சம்மேளனப் போராட்டத்திற்கு யாழ். பல்கலைக் கழக ஊழியர்கள் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கக் கடமைப்பட்டுள்ளனர். இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு:- யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தின் கண்டனக் கடிதத்திற்கான ஆசிரியரின் விளக்கம் நாளைய வலம்புரியில் வெளிவரும்.**

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.08.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.